விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 229 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 20 செவ்வாய்க்கிழமை (05.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உங்கள் ஆரோக்கியம் எமது நோக்கம்
Royal றோயல்
சுத்தமான பசு நெய்

ஆய்வுகூடத்தில் தரம்
பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.
Marketed By:-
(C-3572)
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சத்திரச்சந்திக்கு அருகாமை)
தொ.பே : 021 2222 567

# செம்மணியில் மேலும் பல மனித எச்சங்கள்

## நேற்றைய ஸ்கான் ஆய்வில் கண்டுபிடிப்பு
## தொடரும் மனிதப் புதைகுழியின் மர்மங்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழி வளாகத்தில் மேலும் பல இடங்களில் மனித எச்சங்கள் இருப்பது நேற்றைய ஸ்கான் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.நூலகம் எரிப்பு

## ஈடு செய்ய முடியாத இழப்பு

### பிரதமர் ஹரிணி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நூலகம் எரிக்

15ஆம் பக்கம் பார்க்க

## மீட்கப்பட்ட பொருட்களை அடையாளம் காண உதவுங்கள்

(யாழ்ப்பாணம்)

செம்மணிப் புதைகுழியில் மீட்கப்பட்ட பொருட்களை

15ஆம் பக்கம் பார்க்க

## சான்றுப் பொருட்களை மக்கள் இன்று பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்பட்ட சான்றுப் பொருட்களை பொதுமக்கள் இன்றைய தினம் பார்வையிட்டு அடையாளம் காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மதியம் 1.30 மணி முதல் மாலை 5 மணிவரை சான்றுப் பொருட்களை அடையாளம் காட்டலாம்.

சான்றுப் பொருட்களை அடையாளப்படுத்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

செம்மணி

15ஆம் பக்கம் பார்க்க

## 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணியில் அடையாளம்

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் புதிதாக 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 2ஆம் கட்டத்தின் 30ஆவது நாள் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே இனங்காணப்பட்ட 6 மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் சி.ஐ.டியிடம் உறவுகள் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தினரிடம் நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளனர்.

செம்மணிப்புதைகுழி தொடர்பான வழக்கு விசாரணைகள், குற்றப் புலனாய்வுத் திணைக் களத்தால் தற்போது கையாளப்பட்டுவரும் நிலையிலேயே இந்த வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளன.

செம்மணிப் புதைகுழி அகழ்வு இடம்பெறும் இடத்

15ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் செம்மணிப் புதைகுழியைப் பார்வையிட்டனர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் நேற்றுத் திங்கட்கிழமை செம்மணி மனிதப் புதைகுழிப் பிரதேசத்தைப் பார்வையிட்டனர்.

அதன்படி இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆணையாளர்களான பேராசிரியர் தையமுத்து தனராஜ், பேராசிரியர் பாத்திமா பர்சானா ஹனிபா மற்றும் கலாநிதி கெஹான் தினுக் குணதிலக்க ஆகியோர் செம்மணி மனிதப் புதைகுழிக்கு விஜயம் செய்துள்ளனர்.

இதன்போது யாழ்.பிராந்திய அலுவலகத்தின் இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் மற்றும் ஆணைக்குழுவின் ஏனைய அதிகாரிகளும் இணைந்துகொண்டனர்.

அவர்கள் புதைகுழி இடத்தின் கண்டுபிடிப்புகள் மற்றும் புதைகுழி அகழ்வு முன்

15ஆம் பக்கம் பார்க்க

## விசேட சுற்றிவளைப்பு ஒரே நாளில் 4,479 பேர் கைது

(கொழும்பு)

இலங்கையில் ஒரே நாளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 4,479 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கையை நேற்று முன்தினம் மேற்கொண்டனர்.

இதன்போது பல்வேறு

15ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவில் 4 இந்திய மீனவர்கள் கைது


(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக்கு அருகில் இலங்கை கடல் பகுதியில் சட்டவிரோத மீன்பிடி நடவ

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணி சாட்சியங்களுக்கு பாதுகாப்பு வழங்கத் தயார்

### மனித உரிமைகள் ஆணைக்குழு



15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லைக்குமரன் மலர் வெளியீடும் யாழ்.விருது வழங்கலும்

யாழ்ப்பாண மாநகர சபை சைவசமய விவகாரக்குழு நல்லூர் மகோற்சவ காலத்தில் வெளியிடுகின்ற நல்லைக்குமரன் மலர் - 2025 வெளியீட்டு விழாவும் யாழ்.விருது வழங்கும் நிகழ்வும் நாளை (06) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லூர் ஆதீன மண்டபத்தில் இடம்பெறும்.

யாழ்.மாநகர ஆணையாளர் ச.கிருஸ்னேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜாவும் சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் கை.சிவகரனும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் வரவேற்புரையை பிரதி ஆணையாளர் திருமதி தவலோஜினி நிரோஜனும் ஆசியுரையை சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள், கலாநிதி ஆறு.திருமுருகன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

வெளியீட்டுரையை கோ.கோகுலறதனும் ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் திருமதி கோசலை மதன் அவர்களும் வழங்குவர்.

இந்நிகழ்வில் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு 2025 ஆம் ஆண்டுக்கான யாழ்.விருது வழங்கிக் கௌரவிக்கப்படும்.

நன்றியுரையை சைவசமய விவகாரக் குழுச் செயலாளர் கணேசநாதன் நிகழ்த்துவார்.

இந்நிகழ்வில் அனைவரையும் பங்குபற்றுமாறு யாழ். மாநகர சபை சைவசமய விவகாரக்குழு கேட்டுள்ளது. (ந)

## பொலிஸ் அதிகாரி மீது கொடூரத் தாக்குதல்

### களுத்துறையில் சம்பவம்

களுத்துறை, எகொட உயன பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் அதிகாரி ஒருவர் நேற்று ஆயுதமேந்திய குழுவொன்றின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார்.

களுத்துறை, நாகொட, வெனிவெல்கொட பகுதியிலுள்ள தனது வீட்டில் இருந்த போது, வாள்கள் மற்றும் தடிகளுடன் ஆயுதமேந்திய பத்து பேர் கொண்ட குழு அந்தப் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியுள்ளது.

இத்தாக்குதலில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அப்பகுதியில் போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததால் ஆத்திரமடைந்த குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## நல்லூர் ஆதீனத்தில் தெய்வீக உரை

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு தமிழகத்திலிருந்து வருகை தந்துள்ள திருமுறைக் கலாநிதி தவத்திரு ஸ்ரீமத் சிவாக்கர தேசிகர் அவர்களின் தெய்வீகச் சொற்பொழிவு இன்றும் நாளையும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் இடம் பெறும். (ந)

## கழுத்து நெரித்து தாய் படுகொலை

### மகள் கைது — குருநாகலில் கொடூரம்

தனது தாயைக் கழுத்து நெரித்துக் கொடூரமாகக் கொலை செய்த மகள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குருநாகல், வாரியபொல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரந்தெனிய பகுதியில் நேற்று முன்தினம் (03) இடம் பெற்றுள்ளது.


ரந்தெனிய பகுதியைச் சேர்ந்த 74 வயதுடைய தாயே கொலை செய்யப்பட்டுள்ளார் என்று வாரியபொல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் தாயின் 32 வயதுடைய மகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான மகள் மனநல நோயால் பாதிக்கப்பட்டவர் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## மூதூரில் படுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வ பணியாளர்களின்

### 19 ஆம் ஆண்டு நினைவேந்தல்



(திருகோணமலை)

திருகோணமலை மூதூரில் தன்னார்வ தொண்டு நிறுவனப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் 19 வருடங்கள் கடக்கின்றன. இதனை நினைவு கூரும் முகமாக நினைவேந்தல் திருகோணமலையில் நேற்று (04) இடம் பெற்றது.

இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வு பூர்வமாக நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த ராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன் இலங்கை இராணுவத்தால் 17 தன்னார்வ ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும். நீதியின்றி ஏமாற்றப்பட்டு 19 வருடங்களை கடந்துள்ளது. ஏமாற்றப்படும் பட்டியலில் தான் தமிழர்கள் இருந்து கொண்டிருக்கிறோம் என்றார்.

பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்டு இயங்கிய ACF தன்னார்வ நிறுவனத்தில் பணியாற்றிய 17 ஊழியர்கள் 2006 ம் ஆண்டு திருகோணமலை மூதூரில் படுகொலை செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் அர்ச்சுனா வாக்குமூலம்

(கொழும்பு)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் எதிர்க்கட்சித் தலைவரின் இருக்கையில் அமர்ந்த அர்ச்சுனா, தான் வெளியிட்ட நேரலையில் "தமிழீழ மக்களுக்கு வணக்கம்" என்று விழித்திருந்தார்.

அவர் தமிழீழம் என்ற சொல்லைப் பயன்படுத்தியமை தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

தன்னைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு பாராளுமன்றத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதாகவும் அது சிங்களத்தில் அனுப்பப்பட்டதாகவும் நேற்று முன்தினம் வெளியிட்ட காணொளியொன்றில் அர்ச்சுனா தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர், குறித்த கடிதம் தமிழாக்கம் செய்யப்பட்டு பாராளுமன்றத்திலிருந்து அர்ச்சுனாவுக்கு அனுப்பப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

விற்பனையாளர்கள் தேவை

யாழ்.நகரில் உள்ள பிடவைக் கடைக்கு யாழ்.பிரதேசத்தை அண்டிய பெண் விற்பனையாளர்கள் தேவை.
உணவு மற்றும் நாளாந்தச் சம்பளம் வழங்கப்படும்.
(4974)

சென்னை பெஷன் வேல்ட்
63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

## செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுக்கு சர்வதேச நிபுணத்துவம் அவசியமில்லை

### அகழ்வுப் பணியைப் பார்வையிட்ட பின் மனித உரிமைகள் ஆணைக்குழு

செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுக்குச் சர்வதேச நிபுணத்துவம் அவசியம் இல்லை என மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை பார்வையிட்ட பின்னர் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்,


பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையில் செம்மணி அகழ்வுப் பணிகள் மிகச் சிறப்பாக இடம்பெற்று வருவதாகவும் சர்வதேச நிபுணத்துவ அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு தேவைப்படும் பட்சத்தில் அதுதொடர்பில் கலந்துரையாடுவோம் என்றனர். (ம-7,33)

கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **குமுதினி சச்சிதானந்தம்** அவர்களின் பாசமிகு தந்தையார்

அமரர்.வல்லிபுரம் சிவானந்தம்

அவர்கள் 04.08.2025 அன்று இறைபதமடைந்துவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.




தோற்றம் 01.03.1950
மறைவு 04.08.2025

**பிரிவுத்துயருடன்... பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**
(C-3569)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமரத்ன மனைவியின் கடிதம்

# செம்மணி வழக்கின் புதிய திருப்பம்!



## நடவடிக்கை எடுப்பாரா ஜனாதிபதி? மனோ எம்.பி கேள்வி

**(கொழும்பு)**

**செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் லான்ஸ் கோப்ரல் சோமரத்னவின் மனைவி "சாட்சியமளிக்க தனது கணவன் தயார்" என ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம் எழுதியுள்ளார்.**

**இன்று இந்தக் கடிதம் ஜனாதிபதி அநுரகுமாரதிசாநாயக்கவின் நீதிமன்றில் உள்ளது. நடவடிக்கை எடுக்க அநுர அரசு முன்வர வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை குற்றவாளியான, லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவின் மனைவி திருமதி எஸ்.சி.விஜேவிக்கிரம, ஜனாதிபதி அநுர குமாரவுக்கு கடிதம் எழுதியுள்ளார். அதன் நகல்களை பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் அனுப்பி உள்ளார். ஐ.நாவுக்கும் அனுப்பி உள்ளார்.

அக்கடிதத்தில் அவரது கணவர் அவரிடம் கூறிய சில விடயங்களை, அவர் எழுதியுள்ளார்.

கிருஷாந்தி குமாரசுவாமி மட்டும் அல்ல, இன்னமும் பல நூற்று கணக்கானோர் கொலை செய்யப்பட்டனர். இதை நான் 1998 ஆம் வருடமே என் சாட்சியத்தில் சொன்னேன். இன்று ஐந்து அல்லது ஆறு மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. நான் சொன்னது உண்மை ஆகி உள்ளது."

"மொத்தமாக 250 முதல் 300 பேர் வரை சித்திரவதைக்கு உள்ளாகி கொன்று புதைக்கபட்டார்கள். இன்று தண்டனைக்கு உள்ளாகி இருக்கும் நானும், ஏனைய நால்வரும் மட்டும் இத்தனை பேரை கைது செய்து, சித்திரவதை செய்து, கொன்று, குழி வெட்டி, புதைக்க முடியுமா?"

"யாழ்ப்பாணத்துக்கு செல்லும் பிரதான சாலையில் அமைந்துள்ள, செம்மணி காவல் சாவடியில், பகல் நேரங்களில், அடையாளம் காட்டப்படுவோர், உடன் கைது செய்யபட்டு, இராணுவ வாகனத்தில் , ஏற்றப்பட்டு, 7 ஆம் இராணுவ படை தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, விசாரணை என்ற பெயரில், சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு, கொல்லப்பட்டு, சடலங்களாக இரவு மீண்டும் செம்மணி காவல் சாவடிக்கு கொண்டு வரப்படுவர். மேலதிகாரிகளின் கட்டளை படி நாம் அந்த சடலங்களை அங்கே புதைப்போம்.

தொடர்ந்து புதைத்தோம். இதுதான் நடந்தது. கொலை செய்த மேலதிகாரிகள் தப்பி விட்டனர். புதைத்த நாம் தண்டனைக்கு உள்ளாகி உள்ளோம். சில மேலதிகாரிகள் கைதாகி வழக்கு தொடரப்பட்டு, பின் அந்த வழக்கு நின்று போய் விட்டது. அதிகாரிகள் தப்பி விட்டார்கள். நாம் அகப்பட்டுள்ளோம். இது அநீதி. சர்வதேச விசாரணை நடக்கும் பட்சத்தில் நான் சாட்சியம் அளித்து குற்றம் இழைத்த அதிகாரிகளின் பெயர்களை வெளிபடுத்த தயாராக உள்ளேன்" என லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்கிரம மூலம் இவ்வாறு கூறி உள்ளார்.

ஆகவே இன்று இந்த கடிதம், அநுரகுமார திசாநாயக்கவின் "கோர்ட்டில்" நிற்கிறது.

சர்வதேச கண்காணிப்பு விசாரணைக்கு ஜனாதிபதி அநுர உடன்பட வேண்டும். அதில் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச சுதந்திரமாக சாட்சியம் அளிக்க வேண்டும். ஆனால், இவற்றுக்கு முன், இன்று சிறையில் இருக்கும் லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவுக்கு, உடனடியாக அங்கே அதி உயர் விசேட பாதுகாப்பு வழங்கப் பட வேண்டும்.

இது தொடர்பில், அரசியல் சிவில் சமூகமாக நாம் கூட்டு மேல் நடவடிக்கைக்கு தயார் ஆவோம்.ஐ.நா மனித உரிமை ஆணையர் வொல்கர் டர்க்கிடம் நாம் அதிகார பூர்வமாக கோரிக்கை விடுப்போம்.

பிரசித்தி பெற்ற சித்திரவதை, பாலியல் வல்லுறவு, படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற குற்றவாளி லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ச, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்ட தயார் என்கிறார்.

இலங்கை வரலாற்றில் இது வரை, இப்படி ஒரு இராணுவத்தை சேர்ந்த நபர் ஒப்புதல் வாக்கு மூலம் அளித்து, தனக்கு ஆணை இட்ட மேலதிகாரிகளை அடையாளம் காட்ட தயார் என கூறவில்லை.

ஆகவே, இதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்க அநுரகுமார அரசாங்கம் முன் வர வேண்டும். சர்வதேச நெருக்குதல்களை முறையாக தர ஐ.நா மனித உரிமை ஆணையகமும் முன் வர வேண்டும்.

இதை செய்ய முடியாவிட்டால், இது ஒரு அரசாங்கமாகவோ, அது ஒரு ஐ.நா சபையாகவோ இருக்க முடியாது. இது இன்று சர்வதேச விவகாரம் ஆகிவிட்டதை அநுரகுமாரவும், வொல்கர் டர்க்கரும் உணர வேண்டும்.


அதனால்தான், அநுரவுக்கு செம்மணி விவகாரம் ஒரு அக்னி பரீட்சை என்று அன்றே சொன்னேன் என அவர் தெரிவித்தார். (நி)

## தேங்காய் விலை மீண்டும் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் தேங்காய் விலை மீண்டும் அதிகரித்துள்ளதாக நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, சாதாரண அளவிலான தேங்காய் ஒன்றின் சில்லறை விலை 185 முதல் 205 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.



அத்துடன், சிறிய தேங்காய் ஒன்று 160 முதல் 190 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. (நி)

## அமெரிக்கா,கொரிய விஞ்ஞானிகளால் செயற்கை சிறுநீரகம் அறிமுகம்



(வோஷிங்டன்)

சிறுநீரக நோய்கள் உலகளவில் கோடிக்கணக்கான மக்களைப் பாதித்து வருகின்றன.

இந் நிலையில் , மருத்துவ உலகில் முக்கியமான மைல் கல்லாக செயற்கை சிறுநீரகம் உருவாக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவையும், தென் கொரியாவையும் சேர்ந்த விஞ்ஞானிகள் குறித்த செய்ற்கை சிறுநீரகத்தை உருவாக்கியுள்ளனர்.

குறித்த செயற்கை சிறு நீரகம் உண்மையான சிறுநீரகத்தைப் போலவே 90% செயற்படும் என விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். (நி)

## உள்ளக விவகாரத்தை சர்வதேசத்திற்கு கொண்டு செல்லும் முயற்சி இது

### சோமரத்ன ராஜபக்ஷ மனைவியின் கடிதம் தொடர்பில் அச்சத்தில் அலறும் சரத்வீரசேகர


(கொழும்பு)

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷவுக்கு உயர் நீதி மன்றம் மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளது. இவ்விவகாரத்தை ஜனாதிபதி ஆணைக்குழு நியமித்து விசாரணை செய்வது சிக்கல் நிலையை ஏற்படுத்தும் என முன்னாள் பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

யாழ்.செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதி மன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டு அவரது மனைவி எஸ். சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இலங்கையின் உள்ளக விவகாரத்தை சர்வதேசத்துக்கு கொண்டு செல்லும் ஒரு உத்தியாகவே இவ் விடயம் பயன்படுத்தப்படுகிறது. சர்வதேச கட்டமைப்புக்கு செல்வதற்கு முன்னர் தேசிய நீதிக் கட்டமைப்பை நாடலாம் என்றும் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகிறது.




சோமரத்ன ராஜபக்ஷவின் மனைவி அனுப்பிவைத்த கடிதம் தொடர்பில் ஜனாதிபதி எடுக்கும் நடவடிக்கைகள் என்ன வென்பதை எதிர்பார்த்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

தனியார் ஊடமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## சொந்த மண்ணில் வீழ்ந்த மேற்கிந்தியா தொடரைக் கைப்பற்றி வென்ற பாகிஸ்தான்




பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடி வந்தது. இதில் முதல் போட்டியில் பாகிஸ்தானும், 2ஆவது போட்டியில் மேற் கிந்திய அணியும் வெற்றி பெற்றுள்ளன.

இந் நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3ஆவது போட்டி நேற்று நடைபெற்றது.

இந்த ஆட்டத்திற்கான நாணய சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்வதாக அறிவித்தது. தொடர்ந்து முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டை இழந்து 189 ஓட்டங்களை எடுத்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சாஹிப்சாதா பர்ஹான் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி மட்டுமின்றி தொடரை கைப்பற்றலாம் என்ற நிலையில் களம் இறங்கிய மேற்கிந்திய அணி 20 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து 176 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை 2-1 என்ற கணக்கில் கைப்பற்றி அசத்தியது. (3)

## பாகிஸ்தான் - அயர்லாந்து கிரிக்கெட் ; இரு ஆண்டுகளுக்கு ஒத்திவைப்பு





பாகிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் தொடர் 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் நடைபெறவிருந்த இந்த தொடரின் திட்டமிடல் சிக்கல்கள் காரணமாக, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

முன்னதாக, இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று இருபதுக்கு 20 போட்டிகள் மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளைக் கொண்ட இந்த தொடர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரையான காலப்பகுதியில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

அயர்லாந்து அணியின் முதலாவது பாகிஸ்தானுக்கான சுற்றுப் பயணமாக இருந்த இந்தத் தொடர் குறித்த அறிவிப்பு கடந்த 2024 ஆம் ஆண்டு வெளியானமை குறிப்பிடத்தக்கது (3)





இலங்கையின் 49ஆவது தேசிய விளையாட்டு விழாவுக்கான தேசிய கடினப்பந்து துடுப்பாட்ட போட்டியில் வரலாற்றில் முதல்தடவையாக வடமாகாண அணி மூன்றாம் இடத்தைப்பெற்றுக்கொண்டது. குறித்த வடமாகாண அணியில் கிளிநொச்சி மாவட்டத்தைச்சேர்ந்த 12 வீரர்களும், யாழ் மாவட்டத்தைச்சேர்ந்த 2 வீரர்களும், முல்லைத் தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 1வீரரும் அணியில் இடம்பிடித்திருந்தனர். குறித்த வீரர்களை வரவேற்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி பேருந்து நிலையத்திலிருந்து மத்திய கல்லூரி வரை இடம்பெற்றது. (படங்கள் - [illegible])

## கவாஸ்கரின் 54 வருட சாதனையை 21 ஓட்டங்களில் தவறவிட்ட கில்




இந்தியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்று வருகிறது. இதில் 2ஆவது இன்னிங்சில் 11 ஓட்டங்களில் ஆட்டமிழந்த இந்திய அணித் தலைவர் சுப்மன் கில் இந்தத் தொடரில் மொத்தம் 754 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

இதனால் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த அணித்தலைவர்கள் பட்டியலில் இங்கிலாந்தின் கிரகாம் கூச்சை (752 ஓட்டங்கள் 1990 ஆம் ஆண்டு இந்தியாவுக்கு எதிரான தொடரில்) பின்னுக்கு தள்ளி 2 ஆவது இடத்துக்கு முன் னேறினார். இந்த வகையில் அவுஸ்திரேலிய முன்னாள் கப்டன் டான் பிராட்மேன் 810 ஓட்டங்களுடன் (1936ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான தொடரில்) முதலிடத்தில் நீடிக்கிறார். சுப்மன் கில் மேலும் 21 ஓட்டங்கள் எடுத்து இருந்தால் ஒரு டெஸ்ட் தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்த இந்திய வீரர் என்ற சாதனையை கவாஸ் கரிடம் (774 ஓட்டங்கள், 1971 ஆம் ஆண்டு வெஸ்ட் இண் டீசுக்கு எதிராக) இருந்து தட்டிப் பறித்து இருக்கலாம். ஆனால் அவர் அந்த அரிய வாய்ப்பைத் தவற விட்டுள்ளார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்து மருத்துவமனைகளுக்கும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் வேண்டும்

## சுகாதார அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

நாட்டில் உள்ள பிரதான மருத்துவமனைகளுக்கு மாத்திரம் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் மட்டுப்படுத்தப்படக் கூடாது என சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மாறாகத் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் அனைத்து மருத்துவமனைகளுக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். கொரோனா தொற்று பரவலின் போது அனைத்து மருத்துவமனைகளிலும் தீவிர சிகிச்சைப் பிரிவின் முக்கியத்துவம் குறித்து அதிகம் உணரப்பட்டதாகவும் சுகாதார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, நாடளாவிய ரீதியில் உள்ள பிரதான மருத்துவமனைகளில் மாத்திரமின்றி, அனைத்து மருத்துவமனைகளிலும் தீவிர சிகிச்சைப் பிரிவுகள் விஸ்திரிக்கப்பட வேண்டும் என சுகாதார அமைச்சர் வலியுறுத்தியுள்ளார். (நி)


# கண்ணீர் அஞ்சலி


தோற்றம் - 01.03.1950

மறைவு - 04.08.2025

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளரும் கல்வியியலாளர் நலன்புரிக்கழக தலைவருமான திரு.கை.திலகநாதன் அவர்களின் அன்பு மிக்க மாமனார்

அமரர்

**வல்லிபுரம் சிவானந்தம்**



அவர்களின் பிரிவினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-3566)

பிரிவில் துயர் கொள்ளும் கல்லூரிச் சமூகம்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்.



# கேள்விப் பத்திரம்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

### பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்களின் விற்பனை

## IFB -02

1) யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமானது யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தினாலும், யாழ் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களினாலும் பயன்படுத்தப்பட்ட கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களின் விற்பனையின் பொருட்டு ஆர்வமுடைய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கிறது.

| S. No | Vehicle | Make / Class | Bid ID | Bid Security Amount Rs. |
|---|---|---|---|---|
| Motor Cycle | | | | |
| 1 | NP VO - 4103 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/08/01/2025 | 5,000.00 |
| 2 | NP MS- 6698 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/02/02/2025 | 5,000.00 |
| 3 | NP MT- 8525 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/02/03/2025 | 5,000.00 |
| 4 | NP MW - 3354 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/04/2025 | 5,000.00 |
| 5 | NP MS - 6695 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/05/2025 | 5,000.00 |
| 6 | NP VO – 4189 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/06/2025 | 5,000.00 |
| 7 | NP HT – 2655 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/10/07/2025 | 5,000.00 |
| 8 | NP HR-7383 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/12/08/2025 | 5,000.00 |
| 9 | NP UD-2370 | Motor Cycle | JDS/PROC/Veh.Au/12/09/2025 | 5,000.00 |

2) ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் விதித்துரைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் ஆவணம் ஒவ்வொன்றினையும் மீளளிக்கப்படாத வைப்பாகிய ரூ.1,000/- ஐச் செலுத்தி "மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்" அவர்களுக்கு எழுத்துமூலக் கோரிக்கையினை 05.08.2025 ஆம் திகதியிலிருந்து 19.08.2025 ஆம் திகதிக்கிடையில் அலுவலக நேரத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரை சமர்ப்பிப்பதன் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

3) விலைமனுதாரர்கள் மோட்டார் சைக்கிள்களை யாழ்ப்பாணம், நாவற்குழி, A9 வீதியில் அமைந்துள்ள மாவட்டச் செயலகத்தின் களஞ்சியசாலையில் 05.08.2025 இலிருந்து 19.08.2025 ஆம் திகதி வரை மு.ப.9.30 இலிருந்து பி.ப.3.00 வரை அலுவலக நாட்களில் பார்வையிட முடியும்.

4) ஒவ்வொரு விலைமனுதாரரும் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களிற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடியும், ஆனால் வாகனம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியான விலைமனு ஆவணங்கள் பயன்படுத்தப்படுதல் வேண்டும்.

5) விலைமனுதாரர்கள் மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டதற்கு ஏற்ப விலைமனுப்பிணை முறிப்பணமான மீளளிக்கப்படத்தக்க வைப்பினை யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

6) விலைமனு முத்திரையிடப்பட்டு மூடிய தபாலுறையில் இடதுபக்க மேல் மூலையில் "பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை கொள்வனவு செய்வதற்கான விலைமனு - மோட்டார் சைக்கிள் இலக்கம் / :............" என்ற விடயத்துடன் தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், A9 வீதி, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு 2025.08.20 ஆம் திகதி மு.ப. 10.30க்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும். குறித்த விலைமனுக்களின் முடிவுக் காலத்தின் பின்னர் உடனடியாகவே விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர்களோ அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ விலைமனுக்களைத் திறக்கும் சமயத்தில் பிரசன்னமாகி இருப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

7) பெறுகைக்குழுவின் தலைவர் ஏதேனும் விலைமனுவினை ஏற்றுக்கொள்வதற்கு அல்லது நிராகரிப்பதற்கும், விலைமனுக்கோரல் செயன்முறையை இரத்துச்செய்வதற்கும் மற்றும் விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் சுமத்தாமல் எந்தவொரு நேரத்திலும் சகல விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரித்தினைக் கொண்டிருப்பார்.

(சி-3570)

தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்.


# இராசிபலன்

05.08.2025
ஆடி 20 , செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 12.49 மணிவரை

கேட்டை முற்பகல்-11.47 மணிவரை
சுப நேரம் -10.34-12.04 மணிவரை
இராகுகாலம் - 3.04-4.34 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்:
கார்த்திகை,ரோகிணி.

வளவன்




வீட்டை அழகாக வைத்திருக்கும் எண்ணம் மேலோங்கும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பயணங்கள் கைகூடும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், உறவினர் நண்பர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, உடல் நலன் பற்றிய கவலை உருவாகி மறையும்.




நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக நடந்து கொள்வர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.




பகையொன்று நட்பாகலாம், உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், செய்தொழிலில் உற்சாகம் காட்டுவீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.




பிரபலமானவர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், தாழ்ந்த சுபாவமுண்டு.




கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், கடன் சுமை குறையும் வாய்ப்புண்டு.




நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.




எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், செய்தொழில் மேன்மையுண்டு, நண்பர்களின் ஒத்துழைப்பால் நலம் காண்பீர்கள்.




சவால்களை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.




குடும்ப ஒற்றுமைக்கு பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், ரோக பயமுண்டு.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு.




சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, மற்றவர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

அனுபவம் அறிவின் முகம் பார்க்கும் கண்ணாடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் விளையாட்டுக்கு வழங்கப்படுவதில்லை

## ஆளுநர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

விளையாடும்போது வெற்றி என்பது எங்களுக்கு இலக்காக இருக்கவேண்டும். அந்த வெற்றியை உரிய தடத்தின் ஊடாகவே நாங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும். வெற்றியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக குறுக்குவழிகளை நாங்கள் நாடக்கூடாது.

அது விளையாட்டின் பண்பல்ல. நாங்கள் நேர்வழியில் போராடி தோல்வியடையலாம். அது குறுக்கு வழியில் வெற்றியைப் பெற்றுக்கொள்வதைவிட சிறப்பானது. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, கலாசார அலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண விளையாட்டு விழா ஓமந்தையிலுள்ள விளையாட்டுத்திடலில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.மேலும் தெரிவிக்கையில்,

கல்விக்கு கொடுக்கும் முக்கியத்துவம் விளையாட்டுக்கு வழங்கப்படுவது குறைவு. பெற்றோர்களும் இதற்கு ஒருவகையில் காரணம். கல்வியால் மாத்திரம் ஒருவரின் ஆளுமைகளை மேம்படுத்த முடியாது. ஏனைய துறைகளிலும் குறிப்பாக விளையாட்டுத் துறையில் பங்கேற்பதன் மூலம் எங்களை நாங்களே ஆளுமையுள்ளவர்களாக வடிவமைத்துக் கொள்ளலாம்.

விளையாட்டுத்துறையைப் பொறுத்தவரையில் வடக்கு மாகாணம் இன்னமும் நீண்ட தூரம் பயணிக்கவேண்டியிருக்கின்றது. விளையாட்டு வீரர்களை நாங்கள் இளமையிலிருந்தே அவர்களைப் பயிற்றுவிக்கவேண்டிய தேவையும் உள்ளது. மாகாணமட்டத்தில் சாதித்த வீர வீராங்கனைகள் தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கவுள்ளீர்கள். கடந்த காலங்களில் எமது மாகாணம் சுவீகரித்த பதக்கங்களை விட அதிகளவு பதக்கங்களை நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். (8)

## மீளாய்வுக் கூட்டம்

(வவுனியா)

வடமாகாண தென்னை முக்கோண வலயத்தின் வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் தலைமையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த 1 ஆம் திகதி இடம் பெற்றது.இதன்போது வடமாகாண தென்னை முக்கோண வலயம் என்ற திட்டத்தின் ஊடாக விவசாயிகளுக்கு கால் ஏக்கர் முதல் 50 ஏக்கர் வரையான காணிகளுக்கு தென்னை பயிர்கள் மானியமாக வழங்கப்படுகின்றது. அத்துடன், அதற்கான நீர் விநியோக செயற்பாடுகளுக்காக ஏக்கருக்கு 30 ஆயிரம் ரூபாய் பணமும், தென்னைப் பயிருக்கான உரமும், இதன் போது தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன. (8-250)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 250 | 170 | 200 |
| தக்காளி | 160 | 160 | 150 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 350 | 300 | 200 | 300 |
| கரட் | 400 | 400 | 350 | 340 | 500 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 100 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 120 |
| வாழைக்காய் | 150 | 130 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-250 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 120 | 100 | 150 |
| பாகற்காய் | 350 | 450 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 280 | 350 | 200 | 250 | 400 |
| பயற்றங்காய் | 100 | 180 | 100 | 150 | 200 |
| லீக்ஸ் | 350 | 250 | 150 | 200 | 250 |
| பீற்றூட் | 150 | 160 | 250 | 120 | 150 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 350 | 500 |
| போஞ்சி | 800 | 750 | 800 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 250 | -- | 150 |
| கீரை – 1 பிடி | 100 | 60-120 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 100 | 80 | 150 | 100-200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-200 | 140-180 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 500 | 850 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 110 | 200 |

## பெற்றோல் குண்டு தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் உள்ள வீடொன்றின் மீது கடந்த சனிக் கிழமை இரவு பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட தரப்பினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள நிலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (8-30)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம் எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 12 தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறவுள்ளன.

இம் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி புதன் கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழாவும் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 8.20 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று அன்று மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதென ஆலய நிர்வாக சபையினர் தெரிவித்துள்ளனர். (3)

## நல்லூரரான் திருவடிக்கு... இன்று 8 ஆம் நாள் திருவிழா



### கா! நல்லைக் குமரேசனே!

ஆர்த்தபிற வித்துயரில் ஆழ்ந்துழூழ் காமலே
அணைத்தாள வேண்டுமையா!
சேர்ந்தவூழ் வினையெலாம் நீர்த்திடச் செய்துவொரு
தீர்வினைத் தரவேண்டுமே!
பார்க்குமிட மெல்லாமும் பாலனே வுனையன்றிப்
பார்க்கவே றொன்றில்லையே!
நேர்நின்று சீர்காக்கும் நிகரிலா வித்தகா!
நிறைநல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

### ஏற்றம்மிகு தலைவர்களை ஈந்தளிப்பாய் எழிலோனே!

சிங்கை நகராம் நல்லை நகரிலே!
செங்கோ லோச்சிய செந்தமிழர் மண்ணிலே!
பங்கம் செய்துதினம் பதைமிழக் கட்சிகள்
வெந்தழிந்து பாழ்படாது வெற்றிபெற அருள் முருகா.

நல்லாட்சி நல்மனம் நலம் சார் மக்கள் சேவை
சொல்செயல் ஒன்றாகி சொந்தம் உறவு பாராது
எல்லோர்க்கும் நற்சேவை எந்நாளும் புரிந்து நிற்கும்
ஏற்றம் மிகு தலைவர்களை ஈந்தளிப்பாய் எழிலோனே!

கவிஞர்- சரசாலை யூரான்.

### நல்லூர் வீதி

நான்கு வீதி சனக்கூட்டம்
தெருவெல்லாம்
அன்னதானம்
தாகம் தீர்க்கும்
தண்ணீர் பந்தல்கள்
கடை பார்க்க போனால் இடை இடையே தெரிந்தவர்கள்
துள்ளும் மான் இன பெண்கள் இடறி ஓடும் காளையர்
வெள்ளை மணல் மீது
அள்ளி விளையாடும்
சிறுவர் எல்லையில்லா
அழகு எப்போதாவது
பார்த்தது உண்டு
அவசரம் அவசரமாய்
வீதி வந்து நேரத்தோடு போகும் முருகனை!

கவிக்கிறுக்கன், இணுவில்.

## நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று செவ்வாய்க் கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணி வரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் இடம்பெறவுள்ள நாட்டிய அரங்கில் நடனம்- பரத சிவாலய மாணவர்கள், நட்டுவாங்கம்-திருமதி. பிரசாந்தினி பிறேமச்சந்திரன், பாட்டு- எம்.எஸ். பிரதீபன். மிருதங்கம்- வ. நமணசர்மா, வயலின்-செல்வன். நமணசர்மா லயசர்மா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியலை தவிர்த்து ஒன்றுபடுவோம்!

## சர்வதேச விசாரணை கோரும் எமக்கு வலுச்சேர்க்கும் சோமரத்ன மனைவியின் கடிதம்

### அருட்தந்தை சக்திவேல்

(கொழும்பு)

செம்மணி புதைகுழி நீதிக்காக, பிளவுகளை உண்டு பண்ணும் அரசியலை தவிர்த்து தமிழ் தேச மக்களாக எழுந்து நிற்க அரசியல் தலைமைகள் ஒன்று பட வேண்டும் என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

நேற்று திங்கட்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செம்மணி சமூக புதைகுழியில் இருந்து தினமும் அகழ்ந்தெடுக்கப்படும் மனித எச்சங்கள் படுகொலை செய்யப்பட்டோரின் அவல குரல் நீதியை தேடும் மக்களின் இதயத்தை தட்டிக் கொண்டிருக்கையில் கிரிசாந்தி குமாரசாமி கொலை வழக்கில் தண்டனை அனுபவிக்கும் சோமரத்தின ராஜபக்சவின் மனைவி ஜனாதிபதி, பிரதம மந்திரி, நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி உள்ள சர்வதேச விசாரணைக்கான கடிதம் பேரினவாத இன அழிப்பிற்கும் இனப்படுகொலைக்கும் துணை நிற்கும் இலங்கையின் நீதித்துறை, அரசியல் அதிகாரம், அரசியல் கட்டமைப்பு தமிழர்களுக்கு நீதியை நிலைநாட்டப் போவதில்லை என்பதை சர்வதேசத்திற்கு வெளிப்படுத்தி உள்ளது.

கடந்த காலங்களில் நாட்டின் அரசியல் அவலங்களையும், அரசியல்வாதிகளின் அதிகார துஸ்பிரயோகங்களையும் மட்டும் அல்ல யுத்த அவலங்களையும் வெளிக்கொண்டு வந்து தமிழர்களுக்கு நீதிக்கான குரலாக உண்மையை வெளிக்கொணர்ந்த ஊடகவியலாளர்கள், சாட்சிகள், சட்டத்தரணிகள் காணாமலாக்கப்பட்டனர். கொலை செய்யப்பட்டனர்.

விசேடமாக கிரிசாந்தி கொலை வழக்கின் சட்டத்தரணியாக முன் நின்ற குமார் பொன்னம்பலம் பட்ட பகலில் நடுவீதியில் கொலை செய்யப்பட்டமை உலகமே அறிந்த விடயம். அதற்கான நீதி விசாரணையை பேரின வாத ஆட்சியாளர்கள் புதை குழியில் தள்ளியுள்ள நிலை யிலேயே கிரிசாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாய் சிறை தண்டனை அனுபவிக் கும் சோமரத்தின ராஜபக்ச நூற்றுக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் விதைக்கப்பட்டுள்ளமைக்கு சாட்சியாக இன்றும் உள்ள தோடு தற்போது சர்வதேச விசாரணை வேண்டும் என மனைவி மூலம் வேண்டுகோள்விடுத்திருக்கும் நிலையில் அக் குற்றவாளியின் உயிர் பாதுகாப்பினை உறுதி செய்யுமாறு நீதிக்கான மக்கள் ஆட்சியாளர்களுக்கு வேண்டுகோள் விடுக்கிறேன்.

தமிழின படுகொலை யோடும் யுத்த குற்றங்களோடும் தொடர்புபட்ட படைத்தரப்பின் உயர் மட்ட அதிகாரிகள் கடந்த கால ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாக பாதுகாக்கப்பட்டதோடு கௌரவப் பட்டம், பதவி உயர்வு வழங்கப்பட்டதையும் இராஜதந்திர அந்தஸ்தோடு வெளிநாடுகளுக்கும் அனுப்பப்பட்டதையும் நாம் அறிவோம்.

இந்தப் பின்னணியில் கொலை குற்றத்தண்டனை கைதியான சோமரத்தின தனது மனைவி மூலம் தமக்கு நீதி கிட்டவில்லை. தண்டிக்கப்பட வேண்டிய உயர் அதிகாரிகள் தண்டிக்கப்பட வில்லை. இலங்கையின் நீதி விசாரணையில் நம்பிக்கை இல்லை. சர்வதேச விசாரணை வேண்டும். அங்கு நான் சாட்சி கூற ஆயத்தமாக உள்ளேன்" என கூறியுள்ளமை இதுவரை காலமும் இலங்கை அரசின் மீது நம்பிக்கை இழந்து சர்வதேச நீதி விசாரணையை கோரி நிற்கும் தமிழர்களின் குரலுக்கு வலுசேர்ப்பதாகவே உள்ளது.

எனவே அரசியல் தலைமைகள் சர்வதேச விசாரணைக்கான ஒரு துரும்புச் சீட்டாக சோமரத்னவின் மனைவி ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தை பாவித்து சர்வதேசத்திற்கு ஒருமித்த குரலோடு அழுத்தம் கொடுக்க வேண்டும்.செம்மணி சமூக புதைகுழி இனப்படுகொலையின் கொடூரத்தை மறந்தவர்களாக இருந்த எம்மை எம் ஈழ மண் தாய் எழுச்சியுற்று உண்மைகளை வெளிக் கொணர்ந்து நீதிக்கான குரலாக நாம் ஒன்று திரள அழைக்கையில் பிளவுகளை உண்டுபண்ணும் அரசியலை தவிர்த்து தமிழ் தேச மக்களாக எழுந்து நிற்க அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ரணிலின் தனிப்பட்ட செயலாளருக்கு சி.ஐ.டி அழைப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளர் சாண்ட்ரா பெரேரா குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார். வாக்குமூலம் ஒன்றை வழங்க அவர் சி.ஐ.டிக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி செயலகத்தின் நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணம் தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் அதிகாரிகள் பெரோராவிடம் வாக்குமூலம் பதிவு செய்யவுள்ளனர். (நி)

## க.பொ.த சாதாரண தர இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதி கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் ஒழுங்குபடுத்தலில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு நாளை 6 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தினமும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் நாளை 6 ஆம் திகதி- ஊர்காவற்றுறை பிரதேச செயலகம், 7 ஆம் திகதி- வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரி, 8 ஆம் திகதி- யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (பெண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 9 ஆம் திகதி- யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (ஆண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 10 ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம் (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்), 11 ஆம் திகதி- மன்னார் நகராட்சி சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்), 12 ஆம் திகதி-கிளிநொச்சி கூட்டுறவு சமூக மண்டபம்(கிளிநொச்சி தெற்கு மாணவர்கள்).13 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவு சமூக மண்டபம்(கிளிநொச்சி வடக்கு மற்றும் துணுக்காய் மாணவர்கள்), 14 ஆம் திகதி- முல்லைத்தீவு ஊற்றங்கரை பிள்ளையார் கோவில் மண்டபம், 15 ஆம் திகதி-வவுனியா நகராட்சி சபை மண்டபம் ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளன. அத்துடன் கருத்தரங்கில் பங்குபற்றும் மாணவர்களுக்கு கையேடுகள் மற்றும் கடந்த கால வினா விடைத் தொகுப்பு புத்தகங்கள் என்பன இலவசமாக வழங்கப்படுமென செயலமர்வின் அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (3)


லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
(4963)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308



புனித சூசையப்பர் சர்வதேச திருமண சேவை

உண்மை, நேர்மை 21 வருட சேவை அனுபவம் கிறீஸ்த்து- இந்து சகல சமூகத்தினருக்கான திருமண சேவை அரச பதிவு பெற்றது.

வெளிநாடு- உள்நாட்டுக்கு- படித்த மணப்பெண்கள் உள்நாடு- வெளிநாட்டு உத்தியோகம் - சுய தொழில் மணமகன்கள் உண்டு - தொடர்பு கொண்டு நேரடியாக வரவும்.46வயது- RC ஆண்- பிரான்ஸ்-P.R விவாகரத்துப் பெற்றவர், சீதன எதிர்பார்ப்பு இல்லை. கார்த்திகை மாதம் ஊர் வருகின்றார். கணவர் அற்ற பெண்கள், மனைவி அற்ற ஆண்கள் தொடர்பு கொண்டு நேரில் வரவும்.

(4969)

077 967 2462 – 070 310 7250
மார்சன் கூடல் – இளவாலை



# கல்யாணமாலை
சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1989- இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, லண்டன்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15884 | பிறப்பு-1992- இந்து<br>நட்சத்திரம்`: ஆயிலியம்<br>தகைமை/தொழில்: A/L,Graphic Designer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15867 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்:மிருகசீரிடம்<br>கி-பா-29 ¾ 2 இல் செவ்<br>உயரம் :5'5"<br>தகைமை/தொழில்-Restaurant (france)<br>எதிர்பார்ப்பு: PRஉள்ளவர்<br>தொ.இ: B/15885 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்-சதயம் 2இல் செவ்<br>கி-பா-17 1/2<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்: BSc,Banker<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/15869 |
| பிறப்பு:1998-இந்து<br>நட்சத்திரம்:அத்தம் 3 இல் சூரி செவ்<br>கி-பா- 5 1/4<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:BSc,Tution Teacher<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15886 | பிறப்பு-1992-இந்து<br>நட்சத்திரம்-திருவோணம்<br>கி.பா -65 8 இல் செவ்<br>உயரம் -5'4"<br>தகைமை/தொழில்: A/L.தையல்<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15875 |
| பிறப்பு: 1993- இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>கி-பா-15 1/2 7 இல் செவ்<br>உயரம்:5'7"<br>தகைமை/தொழில்-BEng,Project Engineer(Singapore)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15889 | பிறப்பு-2001-இந்து<br>நட்சத்திரம்-திருவோணம்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில் -BSc, System Reporting Analyst(UK)<br>எதிர்பார்ப்பு:Engineer<br>தொ.இ: G/15877 |
| பிறப்பு: 1997- இந்து<br>நட்சத்திரம் :உத்தரம்<br>கி-பா-42 7 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில்: Electronic Engineer(Australia)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/15890 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 1 இல் செவ்<br>கி.பா - 43<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில் -BA<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15881 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## அணுசக்தியைப் பயன்படுத்த ஈரானுக்கு உரிமை உண்டு

### ஷெபாஸ் ஷெரிப்

(இஸ்லாமாபாத்)


அமைதியான நோக்கங்களுக்கு அணுசக்தியைப் பயன் படுத்த ஈரானுக்கு முழு உரிமை உண்டு என்ற பாகிஸ் தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார்.

அரச முறை பயணம் ஒன்றை மேற்கொண்டு, ஈரானின் ஜனாதிபதி பாகிஸ்தானுக்கு கடந்த சனிக்கிழமை சென்றிருந்தார்.

இதன்போது இஸ்லாமாபாத்தில், பாகிஸ்தானிய பிரதமரை அவர் சந்தித்து பேச்சு நடத்தினார்.

இதன்பின் இருவரும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

இதன்போது கருத்துரைத்த பாகிஸ்தானிய பிரதமர், காசாவில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை ஏற்க முடியாது என்று குறிப்பிட்டுள்ளார். அதேநேரம் ஈரானில் இஸ்ரேல் அத்துமீறி தாக்குதல் நடத்தியது கண்டிக்கத்தக்கது, என்றும் அமைதியான நோக்கங்களுக்கு அணு சக்தியைப் பயன்படுத்த ஈரானுக்கு முழு உரிமை உண்டு என்றும் குறிப்பிட்டார். (நி)



## காசாவில் போர் நிறுத்ததிற்கு அழைப்பு விடுத்து சிட்னில் போராட்டம்




(கன்பெரா)

காசாவில் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள அழைப்பு விடுத்து அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் நேற்று முன்தினம் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சிட்னி துறைமுகப் பாலத்தின் வழியாக, முன்னெடுக்கப்பட்ட இந்த பேரணியில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலஸ்தீன நடவடிக்கைக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட "மனிதநேயத்திற்கான அணிவகுப்பு" என்ற இந்த ஆர்ப்பாட்ட பேரணியை தடுத்து நிறுத்த அந்நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்த நிலையில் அதனை நிறுத்த பொலிஸார் மேற்கொண்ட முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, குறித்த ஆர்ப்பாட்ட பேரணியில் விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசாஞ்சே, பாராளுமன்ற உறுப்பினர் எட் ஹூசிக் மற்றும் நியூ சவுத் வேல்ஸின் முன்னாள் முதல்வர் பாப் கார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாலஸ்தீன அரசை அங்கீகரிக்க அவுஸ்திரேலியா மீது அதிகரித்து வரும் சர்வதேச அழுத்தத்தின் மத்தியில் இந்த ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## தனக்குத் தானே புதைகுழி வெட்டும் பணயக்கைதி

### ஹமாஸ் வெளியிட்ட வீடியோவால் உலகம் அதிர்ச்சியில்

(ஜெருசலேம்)

"காசாவில் சிறைபிடிக்கப்பட்ட தங்கள் நாட்டு பணயக் கைதிகளுக்கு தேவையான உதவிகளைச் செய்து கொடுக்க, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முன்வர வேண்டும்" என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கும் மேலாக இஸ்ரேல் - ஹமாஸ் இடையே போர் நீடித்து வருகிறது.

கடந்த 2023ஆம் ஆண்டு இஸ்ரேலுக்குள் புகுந்த ஹமாஸ் படையினர் பலரை சுட்டுக் கொன்றதுடன், 250 பேரை பணயக் கைதிகளாக பிடித்து சென்றுள்ளனர்.


இவ்வாறு பிடித்துச் செல்லப்பட்ட பயணக் கைதிகளில் பலர் இறந்துவிட்ட நிலையில், சிலர் மீட்கப்பட்டுள்ளனர். இன்னும் 49 பேர் ஹமாஸ் படையினரின் பிடியில் சிக்கியுள்ளனர். இந்நிலையில் பணயக்கைதிகளை விடுவிக்கக் கோரி ஹமாஸ் அமைப்பின் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனிடையே, இஸ்ரேலை அடிபணிய வைக்கும் விதமாக, தங்களது பிடியில் உள்ள இஸ்ரேல் பணயக்கைதி ஒருவரின் வீடியோவை ஹமாஸ் வெளியிட்டுள்ள நிலையில் குறித்த வீடியோவானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

எலும்பும் தோலுமாக காட்சியளிக்கும் அந்த நபர், மண்வெட்டியுடன் தனக்கு தானே புதைக்குழியை வெட்டிக் கொள்ளும் காட்சிகள் குறித்த வீடியோவில் இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், ஹமாஸ் பிடியில் இருக்கும் பணயக் கைதிகளுக்கு உதவ சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் தலையிட வேண்டும் என்றும், அங்குள்ள தங்கள் நாட்டு பணயக் கைதிகளுக்கு தேவை யான உணவு, மருத்துவ சேவை உள்ளிட்ட அடிப்படை தேவைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்,' என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, சிறைபிடிக்கப்பட்டுள்ள பணயக்கைதிகளை சந்திக்க ஹமாஸ் அனுமதிக்க வேண்டும் என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)



## 475 ஆண்டுகளின் பின் குமுறிய எரிமலை

(மொஸ்கோ)

ரஷ்யாவின் கிழக்கு பகுதியில் கம்சட்கா தீபகற்பத்தில் 475 ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக எரிமலை ஒன்று குமுறத் தொடங்கியுள்ளதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் ரஷ்யாவின் கம்சட்கா தீபகற்பத்தில் உள்ள பெட்ரோபாவ்லோ வ்ஸ்கில் 8.8 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த பூகம்பம் ஏற்பட்டதை தொடர்ந்து செயலற்று இருந்த எரிமலை குமுறத் தொடங்கி

ஸ்மித்சோனியன் எரிமலை தரவுத்தளத்தின் படி, கடைசியாக 1550 ஆம் ஆண்டு குமுறியதாக கூறப்படும் க்ரஷென்னினிகோவ் என்றழைக்கப்படும் இந்த எரிமலையில் இருந்து சாம்பல் புகை வெளியேறும் படங்களை ரஷ்ய அரசு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

இந்தப் புகை 6,000 மீற்றர் உயரத்தை எட்டியதாக கம்சட்காவின் அவசரகால சூழ்நிலைகள் அமைச்சு டெலிகிராமில் பதிவிட்டுள்ளது.

எரிமலையிலிருந்து கிழக்கு பசிபிக் பெருங் கடலை நோக்கி புகை மூட்டம் பரவி வருகிறது. அந்த பகுதிகளில் மக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமன் கடற்பகுதியில் கவிழ்ந்த பயணிகள் படகு!

- 68 பேர் நீரில் மூழ்கி உயிரிழப்பு
- 74 பேர் மாயம்
- தேடும் பணி தீவிரம்

(சனா)

**ஏமன் கடற்கரையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை 154 புலம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் குறைந்தது 68 ஆப்பிரிக்க குடியேறிகள் உயிரிழந்தனர்.**

மேலும், இந்த விபத்தில் 74 பேர் காணாமல் போயுள்ளதாக ஐக்கிய நாடுகளின் இடம்பெயர்வு நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஏமனில் உள்ள சர்வதேச இடம்பெயர்வு அமைப்பின் தலைவரான அப்துசாட்டர் எசோவ் கூறுகையில், 54 எத்தியோப்பிய குடியேறிகளுடன் சென்ற கப்பல், தெற்கு யேமன் மாகாணமான அப்யானில் இருந்து ஏடன் வளை குடாவில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மூழ்கியது.

கான்ஃபார் மாவட்டத்தில் கரை ஒதுங்கிய 54 புலம்பெயர்ந்தோரின் உடல்களும், மேலும் 14 பேரின் உடல்களும் இறந்து கிடந்ததுடன் ஏமனின் தெற்கு கடற்கரையில் உள்ள அப்யானின் மாகாண தலைநகரான ஜிஞ்சிபாரில் உள்ள மருத்துவமனையின் பிரேத அறைக்கு அவை கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேநேரம், கப்பல் விபத்தில் 12 புலம்பெயர்ந்தோர் மட்டுமே உயிர் பிழைத்தனர்.


ஏனையவர்கள் காணாமல் போயுள்ளனர் அல்லது இறந்துவிட்டதாகக் கருதப்படுகிறது என்றும் எசோவ் கூறினார்.

இதற்கிடையில், அப்யான் பாதுகாப்பு பணியகம் ஏராளமான இறந்த மற்றும் காணாமல் போன புலம்பெயர்ந்தோரை கருத்தில் கொண்டு ஒரு பெரிய தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கையை விரிவுபடுத்தியுள்ளது.

ஒரு தசாப்தத்திற்கும் மேலான உள்நாட்டுப் போர் இருந்தபோதிலும், கிழக்கு ஆபிரிக்கா மற்றும் ஆபிரிக்காவின் பகுதியிலிருந்து வேலைக்காக வளைகுடா அரபு நாடுகளை அடைய முயற்சிக்கும் குடியேறிகளுக்கு ஏமன் ஒரு முக்கிய பாதையாகும். செங்கடல் அல்லது ஏடன் வளைகுடா முழுவதும் பெரும்பாலும் ஆபத்தான, நெரிசலான படகுகளில் புலம்பெயர்ந்தோர் கடத்தல் காரர்களால் அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

அண்மைய மாதங்களில், ஏமனுக்கு அருகில் நடந்த கப்பல் விபத்துகளில் பல புலம்பெயர்ந்தோர் இறந்துள்ளனர் அல்லது காணாமல் போயுள்ளனர்.

மார்ச் மாதத்தில் ஏமன் மற்றும் ஜிபூட்டிக்கு அருகில் நான்கு படகுகள் கவிழ்ந்ததில் இரண்டு புலம்பெயர்ந்தோர் இறந்தனர் மற்றும் 186 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (நி)



வசிக்கும் பகுதிகள் எதுவும் இல்லை.

மேலும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் சாம்பல் விழுந்ததாக பதிவு செய்யப்படவில்லை என அமைச்சு தெரிவித்துள்ளது.

ஐரோப்பா மற்றும் ஆசியாவில் மிக அதிகமாக செயற்படும் மற்றொரு எரிமலையான கிளைச்செவ்ஸ்காய் கடந்த புதன் கிழமை வெடித்ததைத் தொடர்ந்து இந்த எரிமலை வெடித்துள்ளது.

ஸ்மித்சோனியன் எரிமலை தரவுத்தளத்தின் படி. கிளைச்செவ்ஸ்காய் எரிமலை குமுறல் மிகவும் பொதுவாக நிகழும். 2000 ஆம் ஆண்டு முதல் குறைந்தது 18 முறை குமுறியுள்ளது.

இரண்டு எரிமலை குமுறல்களும் கடந்த புதன் கிழமை ஏற்பட்ட சக்தி வாய்ந்த பூகம்பத்தை தொடர்ந்து ஏற்பட்டுள்ளன.

பூகம்பத்தை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டு ஜப்பானில் இருந்து ஹவாய் முதல் ஈக்வடார் வரையிலான கரையோரப் பகுதிகளிலிருந்து இலட்சக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்தனர்.

ரஷ்யாவில் செவெரோ-குரில்ஸ்க் துறைமுகம் ஊடாக சுனாமிபேரலைகள் தாக்கி மீன்பிடி ஆலையை மூழ்கடித்தது.

2011 ஆம் ஆண்டு ஜப்பானுக்கு அருகில் 9.1 ரிக்டர் அளவில் ஏற்பட்ட பூகம்பத்தால் சுனாமி பேரலைகள் தாக்கி 15,000 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதிலிருந்து இது மிகவும் வலுவானதாக காணப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## புத்தி தெளிவு உண்டாகும்!



**கிரகநிலை** - பஞ்சம ஸ்தானத்தில் சனி (வ), ராகு - பாக்கிய ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - தொழில் ஸ்தானத்தில் சூரியன் - லாப ஸ்தானத்தில் கேது - விரைய ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:**
03.08.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17.08.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து சூரியன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 21.08.2025 அன்று சுக்கிரன் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 25.08.2025 அன்று தொழில் ஸ்தானத்தில் இருந்து புதன் லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் நல்ல திருப்பம் ஏற்படும். லாப ஸ்தானத்தில் இருக்கும் கேதுவால் பயணங்கள் மூலம் லாபம் கிடைக்க செய்யும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும் படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் உண்டாகும். மனோ தைரியம் அதிகரிக்கும். புத்தி தெளிவு உண்டாகும். தொழில் வியாபாரம் திருப்திகரமாக நடக்கும். தொழில் தொடர்பான விடயங்கள் அனுகூலமாக நடக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். சிலருக்கு எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். குடும்பத்தில் சந்தோஷமான நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் அனுசரித்து செல்வது நன்மை தரும்.

**பெண்களுக்கு:** மனம் மகிழும்படியான காரியங்கள் நடக்கும். ஆன்மிக நாட்டம் ஏற்படும். அரசியல்வாதிகள் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி இருப்பது நல்லது. கலைத்துறையினர் புதிய வாய்ப்புகளில் வெற்றி அடைவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பீர்கள். நண்பர்கள் மத்தியில் மதிப்பு கூடும்.




**சித்திரை 3, 4 பாதங்கள்:**
இந்த மாதம் மனதில் இனம் தெரியாத பயம் அவ்வப்போது வந்து போகும். அந்த நேரத்தில் இறை வழிபாட்டில் மனதைச் செலுத்துவது நன்மையைத் தரும்.

உத்தியோகஸ்தர்களுக்கு அதிகார பதவிகளில் இருப்பவர்களுக்கு சாதனைகள் செய்யும் காலம் இது. பணத்தை பாதுகாப்பது சம்பந்தப்பட்ட வேலைகளில் இருப்பவர்கள் கவனமுடன் கையாளவும்.

**சுவாதி:** இந்த மாதம் மேலதிகாரிகளிடம் சுமூகமான உறவை வைத்துக் கொள்ளுங்கள். உங்களுடைய வேலைகளை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். மனிதர்களை இனம் கண்டு கொள்வீர்கள். தங்கள் பணிகளைச் சரியாகச் செய்து முடிப்பீர்கள். அதேநேரம் சில சமயங்களில் காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உங்களது கோரிக்கைகளும் ஆசைகளும் நிறைவேறும். தாய் மற்றும் தாய் வழி உறவினர்களுடன் வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். மற்றவர்கள் செய்யும் சிறு தவறுகளை மன்னிக்க பழகிக் கொள்ளுங்கள். அரசியலில் உள்ளவர்களுக்கு பதவியை எதிர்பார்க்காமல் உழைக்க வேண்டியது இருக்கும்.

**பரிகாரம்:** மகாலட்சுமியை வணங்க கடன் பிரச்சனை தீரும். மன நிம்மதி கிடைக்கும் .

**சந்திராஷ்டம தினங்கள்:**
ஆகஸ்ட் 17, 18.

**அதிர்ஷ்ட தினங்கள்:**
ஆகஸ்ட் 26, 27

## தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும்!



**விருச்சிகம்: கிரகநிலை** - சுகஸ்தானத்தில் சனி (வ), ராகு - அஷ்டம ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன் - தொழில் ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 17.08.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து சூரியன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 21.08.2025 அன்று சுக்கிரன் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 25.08.2025 அன்று பாக்கிய ஸ்தானத்தில் இருந்து புதன் தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எதிர்பார்த்த நல்ல பலன்கள் கிட்டும். காரியத் தடை தாமதம் விலகும். எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காமல் இழுபறியாக இருக்கும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். பழைய பாக்கிகள் வசூலாவதில் வேகம் இருக்கும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சுணக்க நிலை மாறும். பணவரத்து இருக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அலுவலகம் தொடர்பான பயணம் செல்ல வேண்டி இருக்கலாம். அனைத்து விடயங்களிலும் நீங்கள் அனுசரித்து செல்வது நல்லது. கணவன் மனைவிக்கிடையே எதிர்பாராத மன வருத்தம் ஏற்பட்டு நீங்கும். நிதானமாக செய்யும் செயல்கள் வெற்றியை தரும்.

**பெண்கள்:** எடுத்த காரியத்தை வெற்றிகரமாக செய்து முடிப்பீர்கள். அரசியல்வாதிகளின் செல்வாக்கு உயரும். கலைத் துறையினர் சில போராட்டங்களை சந்திக்க வேண்டி இருக்கும்.

மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை குறையும். அதிக மதிப் பெண் எடுக்க ஆர்வமாக படிப்பீர்கள்.

**விசாகம் 4 ஆம் பாதம்:**




இந்த மாதம் குடும்பத்தில் நீண்ட நாட்களாக இருந்து வந்த மனக் கசப்பு மறைந்து சந்தோஷம் ஏற்படும். பெற்றோரின் வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீட்டில் சுபநிகழ்ச்சிகள் தாமதமானாலும் சிறப்பாக நடக்கும். புதிய வீடு, நிலம் வாங்கலாம். பழைய வீட்டை பழுது பார்க்கலாம்.

**அனுஷம்:** இந்த மாதம் பணப் புழக்கம் சரியாக இருக்கும். ஆனால் சுபநிகழ்ச்சிகளுக்காக செலவு செய்ய வேண்டி வரும். தூங்கும் போது கவனம் தேவை. பொருட்களை பத்திரமாகப் பார்த்துக் கொள்ளவும். யாருக்கும் ஜாமீன் கையெழுத்துப் போடகூடாது. அப்படி போட்டால் பிரச்சினைகள் வரலாம்.

**கேட்டை:** இந்த மாதம் நண்பர்களை தேர்ந்தெடுக்கும் போது மிகவும் கவனம் தேவை. பெரியோர்களின் ஆதரவால் நீங்கள் கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பொருளாதார சிக்கல்கள் தீரும். சிலர் கடன் வாங்கி உடனே திருப்பி கொடுத்து விடுவார்கள். மனதில் தேவையில்லாத, வெளியில் சொல்ல முடியாத வேதனை மற்றும் பிரச்சினைகள் வரலாம்.

**பரிகாரம்:**
திருமுருகாற்றுபடையை பாராயணம் செய்து வர கந்தன் அருளால் கண்டபிணி நீங்கும். குடும்ப கஷ்டம் தீரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
ஆகஸ்ட் 19, 20.

**அதிர்ஷ்ட தினங்கள்:**
ஆகஸ்ட் 01, 02, 28, 29 ;

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அராலிப் பகுதியில் நவீன பொது விளையாட்டு மைதானம்

## அதிகாரிகள் கள ஆய்வு



(அராலி)

வேலணை பிரதேசத்திற்கான நவீன வசதிகளுடன் கூடிய பொது விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான அமைவிடத்தை வேலணை - அராலி சந்தி பகுதியில் வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், குறித்த அமைவிடத்தை துறைசார் அதிகாரிகள் நேரில் சென்று கள ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த கள ஆய்வு நேற்றுக் காலை வேலணை பிரதேச சபையின் கோரிக்கையை ஏற்று வேலணை பிரதேச சபையின் தவிசாளர், செயலாளர் ஆகியோருடன் வேலணை பிரதேச செயலக அதிகாரிகள், நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், காணி அதிகாரி மற்றும் துறைசார் அதிகாரிகள் ஒன்றிணைந்தே மேற்கொண்டிருந்தனர்.

ஆய்வை மேற்கொண்ட அதிகாரிகள் வேலணை பிரதேசத்தில், இலங்கை நீர்ப்பாசன திணைக்களத்தின் அதிகார எல்லைக்குள் அராலி சந்தியில் இருக்கும் அரச காணியை வேலணை பிரதேசம் மட்டுமல்லாது தீவகம் முழுவதுமான விளையாட்டுத் துறையின் நலன்கருதி தூரநோக்குள்ள பார்வையுடன் சில வரையறைகளுடன் குறித்த நிலப்பரப்பை வழங்குவதற்கு நீர்ப்பாசனத் திணைக்களம் இணக்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கான திட்டமுன்மொழிவுடன் கூடிய பொறிமுறைகளை தயாரித்து துறைசார் வழிமுறைகளூடாக அதை சமர்ப்பிக்குமாறும் வேலணைப் பிரதேச சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வேலணைப் பிரதேசத்தின் விளையாட்டுத்துறையை மெருகூட்டும் செயற்றிட்டத்தின் தொடர் நடவடிக்கையாக பொது மைதானம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை வேலணை பிரதேச சபையால் கடந்த 2018 ஆம் ஆண்டு முதல் பல்வேறு வழிகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் தற்போது அதற்கான ஏதுநிலைகள் உருவாகியுள்ள நிலையில் மைதானத்தை அமைப்பதற்காக 4 ஏக்கர் நிலப்பரப்பு வழங்கப்படவுள்ளதுடன் குறித்த மைதான வளாகத்திற்குள் நவீன வசதிகளுடன் விளையாட்டு துறைசார் கட்டுமாணங்களை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன் குறித்த நிலப்பரப்பு நீரேந்து பகுதியாக இருப்பதனால் நீர் சேகரிப்பு செயற்பாடுகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் மைதானம் அமைப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-104-33)

# அனுமதியின்றி குழாய்க்கிணறு அமைத்தால் சட்டநடவடிக்கை எடுக்கப்படும்

## வேலணை பிரதேசசபை அறிவிப்பு!

(அராலி)

வேலணை பிரதேச சபையின் ஆளுகைக்குள் முறையான அனுமதி பெறாது குழாய்க் கிணறுகள் அமைப்பது முற்றகத் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், நடைமுறைகளை மீறி செயற்படுபவர்களுக்கு எதிராக மட்டுமல்லாது இயந்திரங்கள் மீதும் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வேலணை பிரதேசசபை அறிவித்துள்ளது.

இது குறித்து பிரதேச சபையின் தவிசாளர் அசோக்குமாரின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட இடங்களில் அண்மைக்காலமாக எந்த வகையிலான அனுமதிப் பத்திரமுமின்றி அதிகளவான குழாய்க்கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றமை எமது சபையால் அவதானிக்கப் பட்டு வருகின்றது. இவ்வாறு குழாய்க்கிணறுகளை எந்த விதமான கட்டுப்பாடுகள் மற்றும் போதிய வழிகாட்டுதல்களுமின்றி தான்தோன்றித்தனமாக அமைப்பதானது எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற மிக சொற்பமான நன்னீர்க் கிணறுகளையும் வெகுவிரைவில் பாதிப்படையச் செய்யும். எனவே அவற்றை விரைந்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் எமக்கு எழுந்துள்ளது.

எனவே எமது பிரதேசத்தில் குழாய்க்கிணறுகளை அமைக்க உத்தேசித்துள்ளவர்கள் பிரதேச சபையின் ஊடாக தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு விண்ணப்பித்து அவர்களது சிபார்சிற்கு அமைவாக பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளல் கட்டாயமானதாகும். அத்துடன் உடனடியாக செயற்படும் வண்ணம் இந்நடைமுறை இறுக்கமாக பின்பற்றப்படும் என்பதோடு அனுமதியின்றி குழாய்க் கிணறு அமைப்பவர்களிற்கு எதிராக விரைந்து சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்

அதே நேரம் குழாய்க் கிணறு அமைக்கும் சேவை வழங்குநர்கள் தங்களது சேவை வழங்கல் தொடர்பாக பிரதேச சபையில் உரிய பதிவுகளை மேற்கொண்டு உரிய பத்திரத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். அத்துடன் குழாய்க் கிணறு அமைப்பதற்கான அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொண்டவர்களிற்கு மாத்திரமே கிணறு அமைத்துக் கொடுத்தல் வேண்டும். அனுமதிப்பத்திரம் இல்லாதோருக்கு குழாய்க்கிணறு அமைத்துக்கொடுத்தல் தண்டனைக்குரிய குற்றச்செயலாகும். அத்துடன் குழாய்க் கிணறு அமைப்பதற்கான சேவை வழங்கல் உரிமப்பத்திரமின்றி எமது பிரதேச சபைக்குள் பிரவேசிக்கும் குழாய்க்கிணறு அமைக்கும் இயந்திரங்கள் மற்றும் வாகனங்கள் தொடர்பில் பிரதேச சபையால் பொலிஸார் ஊடாக உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

குறைவடைந்து கொண்டிருக்கும் எமது தீவகப் பிரதேசத்தின் நன்னீர் வளத்தினை பேணிப் பாதுகாப்பதற்கு வேலணைப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற இந்நடைமுறைகளைப் பின்பற்றி எமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேலணைப் பிரதேசசபை கோரியுள்ளது.

# கிளிநொச்சியின் புதிய பொலிஸ் அத்தியட்சகராக ஜெயசாந்த டீ சில்வா கடமையேற்பு!



(தருமபுரம்)

கிளிநொச்சி பிராந்தியத்திற்கு பொறுப்பான புதிய பொலிஸ் அத்தியட்சகராக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

கிளிநொச்சி பிராந்தியத்திற்கு பொறுப்பாக கடமையாற்றிய சிசிர பெத்தர தந்திரி கொழும்பு தலைமையகத்திற்கு அழைக்கப்பட்டதைத் தொடர்ந்து கிளிநொச்சி பிராந்தியத்திற்கு சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் புதிய அத்தியட்சகராக சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசாந்த டீ சில்வா தனது கடமைகளை இரணைமடுவில் உள்ள அலுவலகத்தில் நேற்றுக் காலை 11 மணிக்கு பொறுப்பேற்றுக் கொண்டார்.

இதற்கு முன்பு ஜெயசாந்த டீ சில்வா கொழும்பு தெற்கு பிராந்தியத்திற்கு பொறுப்பாக கடமையாற்றியிருந்தார்.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-316)

# காணியை விடுவித்து தருமாறு மாநகர முதல்வர் கோரிக்கை


(வவுனியா)

வவுனியா தலைமை பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு காணியையும் விடுவித்து தருமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக வவுனியா மாநகர சபையின் முதல்வர் சு.காண்டீபன் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாநகர சபையின் மாதாந்த அமர்வு முதல்வர் சு.காண்டீபன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது கடந்த அமர்வில் முன்வைக்கப்பட்ட பிரேரணைகளிற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக முதல்வரால் தெளிவுறுத்தப்பட்டது.

இதன்போது வவுனியா பொலிஸ் நிலையம் அமைந்துள்ள முழு காணியையும் விடுவித்து மாநகரசபைக்கு வழங்குமாறு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளதாக முதல்வர் சபைக்கு தெரிவித்திருந்தார். (8-250)

# வீதி விபத்தில் ஒருவர் படுகாயம்



(தருமபுரம்)

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஏ-35 பிரதான வீதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் பெண் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்றைய தினம் இடம் பெற்றது.

சம்பவம் தொர்பில் மேலும் தெரியவருவதாவது,

தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஏ -35 பிரதான வீதியின் ஊடாக புதுக்குடியிருப்பு பகுதியில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளும் அதே திசையில் இருந்து பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளும் வீதியை குறுக்கெடுத்து செல்ல முற்பட்ட வேளை விபத்து இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் பெண் ஒருவர் படுகாயம் அடைந்த நிலையில் தருமபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் சிறு காயங்களுக்கு உள்ளானார். இச்சம்பவம் தொடர்பாக தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 837





கால்கள் கயிறுகளில் தாறுமாறாகச் சிக்கிக் கொண்டிருந்தபடியால் தடுமாறி விழப் பார்த்தாள். அமுதன் அலறிப் புடைத்துக் கொண்டு அவளைப் பிடித்து விழாமல் தடுத்தான்.

"ஐயையோ! இப்படியா பாவிகள் உன்னைக் கட்டிப் போட்டு விட்டுப் போனார்கள்? உடம்பெல்லாம் தடித்துப் போயிருக்கிறதே!" என்றான்.

"இப்போது இவ்வளவு கரிசனப்படுகிறாயே? சற்று முன்னாலேயே வருவதற்கு என்ன?"

"மறுபடியும் அப்படியே கேட்கிறாயே? உனக்கு இப்பேர்ப்பட்ட ஆபத்து வந்திருக்கிறது என்று நான் என்ன கண்டேன்! நீ என்னைப் 'போ, போ' என்று விரட்டினாய் நான் போய்க் கொண்டிருந்தேன்"

"பின் எதற்காகத் திரும்பி வந்தாய்? ஒருவேளை நான் செத்துப்போயிருந்தால் என் உடலைத் தகனம் செய்து விட்டுப் போகலாம் என்பதற்காகவா?"

"சிவபெருமான் தொண்டையில் விஷத்தை வைத்துக் கொண்டார். நீ நாக்கிலேயே வைத்துக் கொண்டிருக்கிறாய். உனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்திருக்கலாம் என்று உன் அண்ணி சொன்னதைக் கேட்டு ஓடோடியும் வந்தேன் அதற்கு நல்ல பரிசு கிடைத்தது!"

இதற்குள் படகிலிருந்து ஓடைக்கரையில் இறங்கியிருந்தாள் பூங்குழலி.

"இந்தக் கத்தியை உன் மீது எறியலாம் என்றிருந்தேன். நீ தப்பித்தாய் இதே கத்தியினால் என் அண்ணியை முதலில் குத்திக் கொன்று விட்டுத்தான் மறு காரியம் பார்க்கப் போகிறேன் அந்தச் சண்டாளி எங்கே இருக்கிறாள்?"

"என்னை விட்டுவிட்டு உன் அண்ணியின் பேரில் எதற்காகப் பாய்கிறாய்? அவள் பேரில் எதற்காக இத்தனைக் கோபம்? உன்னைப் பற்றி எனக்கு அவள் சொன்னது குற்றமா?"

"அவள் தான் என் அத்தையைக் காட்டிக் கொடுத்தவள். புதர் மறைவில் அவள் யாருடனோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்ததை நீ கூடத்தான் பார்த்தாயே?" என்றாள் பூங்குழலி.

"நீ நினைப்பது தவறு! உன் அண்ணி, யாருடன் என்ன இரகசியம் பேசிக் கொண்டிருந்தாளோ, என்னமோ? உன் அத்தையை அவள் காட்டிக் கொடுக்கவில்லை என்பது நிச்சயம். உன் அத்தையைப் பலாத்காரமாகப் பிடித்துக் கொண்டு போனவர்கள் உன் அண்ணியையும் மரத்தோடு சேர்த்துக் கட்டிப் போய் விட்டார்கள். அவளுடைய தலையில் அடித்துக் காயப்படுத்தி விட்டும் போய்விட்டார்கள்."

"இது என்ன வேடிக்கை! நம்புவதற்கு முடியவில்லையே? உன்னை அவள் ஏமாற்றி விட்டிருக்கிறாள்! நல்லது நீ ஏன் திரும்பி வந்தாய், அண்ணியை எவவிடத்தில் பார்த்தாய், எல்லாம் விவரமாகச் சொல்லு!" என்று பரபரப்புடன் பூங்குழலி கேட்டாள்.

சேந்தன் அமுதன் அவ்வாறே விவரமாகக் கூறினான். அவன் தஞ்சாவூர்ச் செல்லும் சாலையில் போய்க் கொண்டிருந்தான். பூங்குழலியைப் பிரிந்து போக மனமின்றித் தயக்கத்துடனே தான் போய்க் கொண்டிருந்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வட்டிக்கு சேர்த்த பணம்



(நேற்றைய தொடர்ச்சி)

அவன் தான் கொண்டு வந்திருந்த பையை விரித்து அதற்குள் இருந்த நகைகளைக் காட்டினான். நகைகள் பளீரென்று மின்னின. பாட்டிக்கு உடனே நம்பிக்கை வர வில்லை, நான் பணம் கொடுப்பதாக உனக்கு யாரப்பா சொன்னார்கள்? இந்த ஊரில் எல்லோரிடமும் கேட்டு பார்த்தேன், அவர்கள், எல்லோரும் உங்களைப் பார்க்க சொன்னார்கள், பேசிக் கொண்டிருக்கும் போதே வீட்டிற்குள் இருந்த இருவரும் வெளியே வந்தனர்.

என்று இவன் கையில் இருந்த நகைகளை, வெளியே வந்த இருவரும் இங்கே கொடு பார்க்கலாம் என்று வாங்கிப்பார்த்து தங்களுக்குள் பேசிக் கொண்டனர். பாட்டிக்கு அதை பார்த்தவுடன், விட்டால் பணம் கொடுத்து இவர்களே வாங்கி கொள்வார்கள் போலிருக்கிறது என்று நினைத்தாள். ஏம்ப்பா இதை விலைக்கு கொடுக்கிறாயா? அந்த இருவரில் ஒருவன் கேட்க, இவன் யோசித்தான், பணம் அடகு வைக்கக் கட்டுப்படியாகலை என்றால் விற்றுவிடுவது என்று நினைத்துக் கொண்டு இருக்கிறேன்.

நகைகளை கையில் வாங்கி பார்த்தவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டனர். எப்படியும் குறைச்சு பேசி எல்லாத்தையும் வாங்கிடலாம். அவர்கள் பேசிக் கொள்வதை கேட்டுக் கொண்டிருந்த பாட்டிக்கு உடனே சபலம் தட்டியது, தானே அந்த நகைகளை வாங்கிக் கொள்ளலாம், என்று முடிவு செய்தவள், இதற்கு எவ்வளவு ஆகும் என்று அவர்களை கேட்டாள், அவர்கள் திரும்பி ஏம்பா இந்த நகைகளை பத்தாயிரத்துக்கு வாங்குகிறோம், அப்படியே கொடுப்பாயா? அவன் சற்று நேரம் யோசித்தவன் கொஞ்சம் கூட போட்டு கொடுங்க என்று கெஞ்சினான், அதெல்லாம் முடியாது, அந்த பணத்துக்கு கொடுக்கறதுன்னா கொடு, இல்லையின்னா கிளம்பு என்று விரட்வும், சரி ங்க என்று தலையாட்டினான்.

பாட்டிக்கு ஒரே சந்தோசம் உள்ளே ஓடி சென்று சேர்த்து வைத்திருந்த பணத்தில் பத்தாயிரத்தை எடுத்து வந்து கொடுத்தவள் அந்த நகைகளை வாங்கி பார்த்து ஆனந்தபட்டாள். நகைகளை விற்று விட்ட எத்தன் மெல்ல நடையை கட்டினான், சற்று நேரத்தில் பாட்டியிடம் பேசிக் கொண்டிருந்த இருவரும், தாங்கள் வந்து பார்க்கிறோம், என்று சொல்லி விட்டு கிளம்பினர். பாட்டி அவர்களை அனுப்பி விட்டு அந்த நகைகளை மீண்டும் எடுத்து பார்த்தாள், உற்று உற்று பாரத்தவளுக்கு அப்பொழுது தான் சற்று சந்தேகம் வர அதை கொஞ்சம் தேய்த்து பார்த்தாள், உள்ளிருந்த ஈயம் பல்லை காண்பித்தது. தான் ஏமாந்து விட்டோம் என்று தெரிந்தவுடன் குய்யோ முய்யோ என்று கூக்குரலிட்டாள்.

பாட்டியின் சத்தம் கேட்டு ஓடி வந்த மக்கள், பாட்டி ஏமாந்தற்காக வெளியில் வருத்தப்பட்டதாக காண்பித்து கொண்டாலும் உள்ளுக்குள் சந்தோசப்பட்டு கொண்டனர். பிறரை துன்புறுத்தி சம்பாதித்து சேர்த்து வைக்கும் பணம் அவர்களை வேதனைப்படுத்தி விட்டோ அல்லது ஏமாற்றி விட்டோ, அடுத்தவரிடம் சென்று விடும். அங்கும் அந்த பணம் நிற்காமல் அடுத்தவர் மாற்றி அடுத்தவர்களிடம் பறந்து கொண்டே இருக்கும். நேர்மையாகவோ, அல்லது உழைத்தோ சம்பாதிக்கும் பணம் என்றென்றும் உண்மையுடன் நம்மிடம் இருக்கும்.

(முற்றும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்மைச் சுற்றி செயற்படும் விதிமுறைகளால் அனைத்தும் உண்டாக்கப்படுகின்றன.
– சால்ஸ் டார்வின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீட்டுக் கிணற்றை மறந்த யாழ்ப்பாணத்தார்

யாழ்ப்பாணத்துக்கு முதன் முறையாக யானை கொண்டு வரப்பட்டபோது தினபதி பத்திரிகையில் **யானையைத் தெரியாத யாழ்ப்பாணத்தாருக்கு** என அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த எஸ்.டி.சிவநாயகம் செய்தி வெளியிட்டதாக செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் ஒரு சொற்பொழிவில் கூறியிருந்தார்.

இப்போது எங்கள் யாழ்ப்பாணத்து நிலைமையைப் பார்க்கும்போது **கிணற்று நீரை மறந்த யாழ்ப்பாணத்தார்** என்று எழுதுவது தகும் என நினைத்தோம்.

ஆம், ஒரு காலத்தில் கிணறு வெட்டி அதைக் கட்டியபின் அந்தக் கிணற்றுக்குப் பொங்கல் செய்து, கங்கைக்குச் சமனாகக் கிணற்று நீரைப் போற்றிய பண்பாட்டின் சொந்தக்காரர் நாம்.

ஆனால் இப்போது எங்கள் வீட்டுக்கிணற்று நீரைப் பருகாமல் விட்டது மட்டுமல்ல, எங்கள் வீட்டுக் கிணற்றை மறந்தே போனோம் என்பது தான் வேதனைக்குரியது.

கிணற்று நீர் தொடர்பில் பலரும் பலவாறாக அறிக்கைகளைவிட, எமது மக்கள் போத்தல் குடிநீருக்கு அடிமையாகிப் போயினர்.

உண்மை. நிலக்கீழ் நன்னீரைக் கொண்டமைந்த எங்கள் யாழ்ப்பாண மண்ணில் குடிநீருக்காகக் கோடிக்கணக்கான ரூபாய்களை நாம் நாளாந்தம் செலவிடுகிறோம் என்ற உண்மையை எவரும் நினைப்பதில்லை.

தென்னிலங்கையில் இருந்து லொறி லொறியாகப் போத்தல் தண்ணீர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேருகிறது.

யாழ்ப்பாணத்தில் எந்த நிகழ்வாயினும் தண்ணீர்ப் போத்தல் என்பதே முதல் பேச்சாயிற்று.

அதேநேரம் வட மாகாணத்தில் போத்தலில் குடிநீரை அடைத்தல் என்ற பேச்சுக்கே இடமில்லை.

போத்தலில் குடிநீர் அடைத்தால் நிலத்தடி நீர் இல்லாமல் போய் விடும் என்ற கருத்தை தென்னிலங்கையில் உள்ள போத்தலில் குடிநீர் அடைக்கும் நிறுவனங்கள் மிகச் சிறப்பாகப் பிரசாரம் செய்து வைத்துள்ளன.

அதற்காக இங்குள்ள சில புத்திஜீவிகளை அந்த நிறுவனங்கள் நியமித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதன் காரணமாக வட மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்து மக்களின் காசு தண்ணீருக்காகக் கரைகிறது.

கோடிக்கணக்கான ரூபாய்களை தென்னிலங்கை, போத்தல் தண்ணீர் ஊடாக உறிஞ்சுகிறது.

தண்ணீரை இலவசமாகப் பெற்றுக் கொள்கின்ற தென்னிலங்கை நிறுவனங்கள், குடிநீர் அடைக்கின்ற பிளாஸ்ரிக் போத்தலுக்கும் போக்குவரத்துச் செலவுக்கும் விற்பனை முகவர்களின் தரகுக்குமாக அதிக விலையை நிர்ணயித்து குடிநீர் என்ற பேரால் மாதந்தோறும் கோடிக்கணக்கான ரூபாய்களை வாரிச் சுருட்டுகின்றன.

அதேநேரம் பிளாஸ்ரிக் போத்தல்கள் இங்கு கழிவுகளாகக் குவிகின்றன.

என்ன செய்வது எங்கள் வீட்டுக்கிணற்றுக் குடிநீரை புறந்தள்ளிய எங்களை என்னவென்று சொல்வது.

## இனப்படுகொலை விவகாரத்தில் சோமரத்னவின் வாக்குமூலம் முக்கிய திருப்பு முனையாக அமையும்

### அதற்கு சர்வதேச விசாரணை அவசியம் - சிறீதரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)

யுத்தகாலத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் இராணுவத்தால் நடாத்தப்பட்டு வந்த சித்திரவதைக் கூடங்கள் என்பன பற்றிய விபரங்களை வெளியிடுவதற்குத் தயாராக இருப்பதாக லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளமை தமிழருக்கெதிரான இனப் படுகொலை விவகாரத்தில் மிக முக்கிய திருப்பு முனையாக அமைந்திருப்பதாக இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் சிவஞானம் சிறீதரன் சுட்டிக் காட்டியுள்ளதோடு இதனை ஒரு சர்வதேச கட்டமைப்பின் முன்னிலையில் விசாரிப்பதன் ஊடாக மாத்திரமே சகல உண்மைகளையும் வெளிக்கொணர முடியும் எனத் தெரிவித்தார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அவர் இந்த நாட்டுக்குள் உண்மைகளை வெளிப்படுத்தும் பட்சத்தில் தனக்குப் பாதுகாப்பு இல்லை எனக் கருதுவதனாலேயே அவர் சர்வதேச விசாரணையைக் கோருகிறார். இந்த சர்வதேச விசாரணையையே நாம் 2010 ஆம் ஆண்டிலிருந்து கோரிவருகிறோம்.

அதேபோன்று தனக்கு ஆணையிட்ட உயரதிகாரிகள் படுகொலைக் குற்றங்களைப் புரிந்தவர்கள் உள்ளிட்ட சகலரது விபரங்களையும் வெளிப்படுத்துவதற்குத் தயார் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

எனவே நீதிக்கான பயணத்தில் சர்வதேசத்தின் தலையீடு அல்லது பங்களிப்பு இல்லாவிடின் இவ்விடயத்தில் உண்மையான நீதி கிட்டாது.

எனவே இலங்கை அரசாங்கம் முதலில் இதனைப் புரிந்து கொள்ள வேண்டும். மீண்டும் மீண்டும் உள்ளகப்பொறிமுறை எனக் கூறி சகல தரப்பினரையும்ஏமாற்றுவதை விடுத்து, நீதியானதொரு சர்வதேசப்பொறி முறையை நோக்கி நகர வேண்டும் என வலியுறுத்தினார். (ம-7)

## பாடசாலை பாட விதானத்தில் தொழிற்கல்வியும் உள்ளீர்க்கப்படும்

### பிரதமர் ஹரிணி யாழில் உறுதி

(யாழ்ப்பாணம்)

புதிய கல்விச் சீர்திருத்தம் வாயிலாக தொழிற்கல்வியும் பாடசாலைக் கல்விப் பாடவிதானத்துள் சேர்க்கப்படும். எனவே இனி எந்தவொரு பிள்ளையும் கல்வியில் தோல்வியடைய வாய்ப்பில்லை.

சகல மாணவர்களுக்கும் உயர்கல்வியைத் தொடரும் பேறு கிட்டும் எனப் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உறுதிபடத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண கிறிஸ்தவ இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வட மாகாண கற்றறிவாளர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய பிரதமர்,

முன் மொழியப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மூலம் வரலாறு, சமயம் மற்றும் அழகியல் ஆகிய பாடங்கள் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகச் சிலர் இன்னும் தவறான கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர்.

இந்தத் தவறான கூற்றுகளுக்கு எந்த அடிப்படையும் இல்லை. வரலாறு, அழகியல் அல்லது சமயம் ஆகிய பாடங்கள் எந்த வகையிலும் பாடத்திட்டத்திலிருந்து நீக்கப்படவில்லை.

புதிய கல்விச் சீர்திருத்தத்தின் கீழ் மாணவர் சமூகத்தின்மீது சுமையை ஏற்படுத்தும் கல்விக்குப் பதிலாக பிள்ளைகளுக்கு அழுத்தம் இல்லாமல் கற்றுக்கொள்ளவும் அவர்கள் விரும்பும் பாடங்களை மேலும் கற்பதன் மூலம் தங்கள் வாழ்க்கைத் தொழிலை தேர்வு செய்யவும் சரியான வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

தொழிற்கல்வியைப் பாடசாலைக் கல்வியினுள் கொண்டு வந்து மாணவர்கள் கல்வித்துறை அல்லது தொழிற்கல்வி ஆகிய இரண்டு பாடப் பிரிவுகளிலிருந்தும் தங்களுக்கு மிகவும் பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்புக் கிடைக்கிறது.

தற்போதைய கல்விச் சீர்திருத்தம் ஏற்கனவே தயாரித்து முடிக்கப்பட்ட இறுதிச் சீர்திருத்தமல்ல.

பாடங்கள் தொடர்பான வல்லுநர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகத்தின் நேர்மறையான பரிந்துரைகள் மற்றும் கருத்துக்களைக் கருத்தில் கொண்டு தேவையானவற்றை இணைத்து தேவையற்றவற்றை நீக்கிப் படிப்படியாக மேற்கொள்ளப்படும் சீர்திருத்தமே எனத் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண கல்வித்துறை அதிகாரிகள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்டனர். (ம-7)

## ஜனாதிபதி செயலாளரது

### வாகனம் விபத்து; நால்வர் காயம்

(தலங்கம)

தலங்கம, அக்குரேகொடப் பிரதேசத்தில் ஜனாதிபதி செயலாளருக்குச் சொந்தமான கார் மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வரும் காயமடைந்துள்ள நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் ஆவர்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரே ஜனாதிபதி செயலாளருக்குச் சொந்தமான குறித்த காரைச் செலுத்திச் சென்றுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்து காரைச் செலுத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகஸ்தர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## வவுனியாவில் வீடு புகுந்து திருடிய இளைஞன் கைது

வவுனியா சோயா வீதியில் கடந்த ஒரு வாரத்துக்கு முன்னர் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பில் 33 வயதுடைய இளைஞன் ஒருவர் நேற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருட்டு இடம்பெற்ற வீட்டின் உரிமையாளர்களால்வவுனியாப்பொலிஸ் தலைமையகத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய வவுனியா பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி அவர்களின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

அதற்கமையவே வவுனியா, ஓமந்தை - புதிய வேலர் சின்னக்குளம் பகுதியில் வசிக்கும் 33 வயதுடைய குறித்த நபரே நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தாலிக்கொடி, சங்கிலி, காப்பு உள்ளிட்ட 66 இலட்சத்து 33 ஆயிரத்து 800 ரூபாய் பெறுமதியான 25 பவுணுக்கும் அதிகமான நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டதன் பின் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொசாட் 29

சொக்கன்

ஜோசஃப் கொஞ்சம் கூடத் தயங்கவில்லை. மளமளவென்று தகவல்களைக் கொட்ட ஆரம்பித்தார். விமானத்தைக் கடத்தப்போறது நான் இல்லை. என்னோட மருமகன்தான் அவன் பேரு முனிர் ரெட்ஃபா ஈராக் விமானப் படையில பைலட்டா இருக்கான் அவனுக்கு மிக்21 விமானம் ஓட்டுற அனுமதி இருக்கு.

அது சரி அவரால ஒரு மிக்21ஐ இஸ்ரேலுக்குக் கொண்டுவர முடியுமா?

நிச்சயமா முடியும் என்றார் ஜோசஃப் முனிருக்கு இந்த ராணுவத்தில மரியாதையே இல்லை அவனோட மனசுக்குப் பிடிக்காத விடயத்தையெல்லாம் செய்யச் சொல்லிக் கட்டாயப் படுத்தறாங்க. பையன் ரொம்ப நொந்துபோயிருக்கான் இந்த நிலைமையில நான் என்ன சொன்னாலும் கேப்பான் நீங்க கவலைப் படவேண்டாம்.

மொசாட் யோசித்தது. இந்த ஆள் சொல்வதை நம்பி ஒரு மில்லியன் டொலரைத் தரலாமா? கூடாதா?

நாம முதல்ல அந்த முனிர் ரெட்ஃபாவைச் சந்திச்சுப் பேசணும் என்றார் மியர் அமித் நிஜமாவே அவர் மிக்21ஐக் கடத்தறதுக்குத் தயாரா இருக்காரான்னு விசாரிச்சுத் தெரிஞ்சுக்கணும் அதுக்கப்புறம் மற்ற விடயங்களை யோசிக்க முடிவு செஞ்சுக்கலாம்.

விரைவில் முனிர் ரெட்ஃபா ரோம் நகருக்குப் புறப்பட்டு வந்தார். அங்கிருந்து ஒரு சிறப்பு விமானத்தில் இஸ்ரேலுக்குள் கொண்டுவரப்பட்டார்.

அடுத்த மூன்று நாள்கள் பல ராணுவ அதிகாரிகள் உளவுத்துறையினர் முனிரைச் சந்தித்தார்கள். உண்மையாகவே அவருக்கு ஈராக் ராணுவத்தின் மீது வெறுப்பு இருக்கிறதா எத்தனை தடைகள் வந்தாலும் சமாளித்து விமானத்தைக் கடத்திக் கொண்டு வரும் அளவுக்குத் தைரியமான ஆள் தானா அல்லது கடைசி நிமிடத்தில் பயந்து



கொண்டு டிராயரை நனைத்துவிடுவாரா என்று தோண்டித் துருவினார்கள்.

கடைசியில் இஸ்ரேலுக்கு முழுத் திருப்தி முனிர் எதிர்பார்க்கிறபடி ஒரு மில்லியன் டொலர்களைக் கொடுப்பதாகத் தீர்மானித்துவிட்டார்கள். மிக் 21 விமானத்தைக் கடத்துவதற்கு நாள் குறிக்கப்பட்டது, நிமிட சுத்தமாகத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

ஆனால் முனிர் விமானத்தைக் கடத்திவிட்டார் என்கிற தகவல் தெரிந்தால் ஈராக் அரசாங்கம் விரல் சூப்பிக் கொண்டு சும்மா உட்கார்ந்திருக்குமா? உள்ளூரில் இருக்கிற முனிருடைய அப்பா, அம்மா, மனைவி, குழந்தைகள், மற்ற உறவினர்களையெல்லாம் ஜெயிலில் தள்ளிச் சித்திரவதை செய்யமாட்டார்களா?

நீங்க அதைப்பத்திக் கவலைப்படவேண்டாம் என்றது மொசாட், யாருக்கும் தெரியாம [illegible] குடும்பத்தைச் சேர்ந்த எல்லோரையும் ஈராக்கிலிருந்து பத்திரமா வெளியே கொண்டுவர வேண்டியது எங்க பொறுப்பு.

இன்னொரு பிரச்சினை ஈராக் எல்லைக்கும் இஸ்ரேலுக்கும் நடுவே முனிர் பல நூறு கிலோ மீட்டர்களைக் கடக்க வேண்டும். அவ்வளவு தூரம் ஒரு திருட்டு விமானத்தை ஓட்டி வருவது ஆபத்து இல்லையா? வழியில் யாராவது கண்டுபிடித்துச் சுட்டுத் தள்ளிவிட்டால்?

இதற்கும் இஸ்ரேல் ஒரு தந்திரம் செய்தது. ஈராக் அல்லது அதன் நட்பு நாடுகள் யாருடைய கண்ணிலும் படாமல் இஸ்ரேல் வருவதற்கு ஒரு சுற்றுவழி கண்டு பிடித்தார்கள். அதைக் கச்சிதமாக மேப் வரைந்து முனிர் கையில் கொடுத்துவிட்டார்கள்.

இறுதியாக ஜெனரல் மொர்டெசாய் ஹாட் முனிரைச் சந்தித்துப் பேசினார். மிஸ்டர் ரெட்ஃபா இது ரொம்ப ரிஸ்கான வேலை கொஞ்சம் அசந்தாலும் உங்க உயிருக்குத்தான் ஆபத்து.

அதைப்பற்றி நீங்க கவலைப்படாதீங்க சார் என்றார் முனிர் ரெட்ஃபா இன்னும் கொஞ்ச நாள்ல மிக்21 [illegible] அதுக்கு நான் பொறுப்பு.

ஈராக் திரும்பிய முனிர் தன்னுடைய கடத்தல் திட்டத்தை நிறைவேற்றத் தயாரானார். இன்னொருபக்கம் மொசாட் ஏஜென்ட்கள் முனிரின் குடும்பத்தினரைக் கொஞ்சம் கொஞ்சமாக ஈராக்கிலிருந்து வெளியேற்றினார்கள் மிக் 21ன் கடத்தல் பாதையில் எந்தப் பிரச்சினையும் வராதபடி கவனமாகக் காய்களை நகர்த்த ஆரம்பித்தார்கள்.

அப்போது மியர் அமித் மற்ற மொசாட் உளவாளிகளுக்கு ரென்ஷன் குறையவில்லை. இந்தத் திட்டம் ஒழுங்காக வேலை செய்யுமா? நிஜமாகவே நம்மால் ஒரு மிக்21ஐக் கடத்தி விடமுடியுமா? அமெரிக்காவால் சி.ஐ.ஏ.வால் முடியாததை நாம் சாதிக்கப்போகிறோமா? அல்லது பல் உடைந்து பின்வாங்கப்போகிறோமா?

## அவன் பறந்து போனானே!

குட்மார்னிங் ரெட்ஃபா மார்னிங் முனிர் ரெட்ஃபா அந்த ஈராக் விமானிகளைச் சலனமில்லாமல் பார்த்தார். இப்போது சிரித்துக் கொண்டே காலை வணக்கம் சொல்லும் இவர்கள் இன்னும் சில மணி நேரம் கழித்து என்னை வில்லனாகப் பார்க்கப்போகிறார்கள். கொலை வெறியோடு துரத்தப்போகிறார்கள். துரோகியைச் சுட்டு வீழ்த்த வேண்டும் என்று துடிக்கப்போகிறார்கள்.

அதற்குள் நான் ஈராக் எல்லையைக் கடந்து ரொம்ப தூரம் போய் விடுவேன் என்று நினைத்துக்கொண்டார் ரெட்ஃபா அதன்பிறகு எந்தப் பிரச்சினையும் இருக்காது, என்மீது ஒரு தூசு துரும்பு படாமல் இஸ்ரேல்காரர்கள் கவனித்துக்கொள்வார்கள்.

இப்படி ஆயிரம்தான் சமாதானம் சொன்னாலும் அவரால் பதற்றத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எல்லாம் ஒழுங்காக நடக்குமா என்கிற தவிப்பு முதன்முறையாகச் சட்டத்தை அதுவும் ராணுவ நியதிகளை மீறித் தப்புச் செய்கிற படபடப்பு கொஞ்ச நேரம் கழித்து உடம்பில் உயிர் இருக்குமோ இருக்காதோ என்கிற பயம்.

முனிர் ரெட்ஃபா பிறவிக்ரிமினல் இல்லை. இப்போதுகூட அவர் நினைத்தால் திரும்பிச் சென்றுவிடலாம். ஈராக் ராணுவத்திடம் சரணடைந்து இஸ்ரேல்காரர்கள் என்னை மிரட்டி மிக்21 விமானத்தைக் கடத்தச் சொன்னார்கள். நான் ஒப்புக்கொள்ளவில்லை என்று நைசாகக் கட்சி மாறிவிடலாம்.

ம்ஹூம் அது முடியாது முனிரின் உறவினர்களெல்லாம் இப்போது இஸ்ரேல் கையில் அவர் லேசாகத் தயங்குகிறார் என்று தெரிந்தாலும்கூட உடனடியாக ப்ளாக்மெயில் ஆரம்பமாகிவிடும்.

அதுமட்டுமில்லை அப்போது முனிருக்குத் தெரியாத விடயம் அவர் இஸ்ரேல் வந்திருந்தபோது மொசாட் திருட்டுத்தனமாகப் பல புகைப்படங்களை எடுத்துவைத்திருந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

தில் வைத்தே வாக்குமூலம் பெறும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளது. (ம-7)

## சான்றுப்...

புதைகுழி அகழ்வில் புத்தகப்பை, குழந்தையின் பொம்மை, ஆடைகள், செருப்பு உட்பட பல பொருட்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## விசேட சுற்றி...

குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 23 பேரும் சந்தேகத்தின் பேரில் 748 பேரும் பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 210 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 161 பேரும் மதுபோதையில் வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 110 சாரதிகளும் கவனக் குறைவாக வாகனங்களைச் செலுத்தியமை தொடர்பில் 25 சாரதிகளும் ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 3,202 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 5911
S 0 9 2 6 7 8
அத சம்பத
S 2 6 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 486
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.04
6027
மேடம் 16 19 25 46
www.nlb.lk

தன நிதானய
திகதி - 2025.08.04
சீட்டிழுப்பு இலக்கம் - 1941
X 37 75 76 81 X
Double Chance 85767

மெகா பவர்
திகதி 04/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2259
K 01 32 43 52 57
Double Chance

ஜய
திகதி 2025.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 0179
W 3 7 4 8

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4153
சீட்டிழுப்பு திகதி 04.08.2025
I 24 29 71 80
I
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.04
சீட்டிழுப்பு இலக்கம் 1220
கும்பம் 15 25 42 58 கும்பம்
13101


## 5 எலும்புக்கூட்...

எடுக்கப்பட்டுள்ளன.

மேலும் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை 135 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 126 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## மீட்கப்பட்ட...

அடையாளம் காண உதவுங்கள் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக ஆஜராகும் சட்டத்தரணி ரனித்தா கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நேற்று செம்மணிப் புதைகுழியின் அகழ்வுப்பணிகள் 30 நாளாக நடைபெற்றது. இதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளுடன் அகழ்ந்தெடுக்கப் பட்ட பொருட்களை அடையாளம் காண்பதற்கு நீதிமன்றம் அனுமதியளித்திருப்பதால் இன்றைய தினம் குறித்த பொருட்களை அடையாளம் காண்பதற்கு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளிற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் அவர்கள் வந்து பொருட்களை அடையாளம் காண முன்வர வேண்டும் என்றார். (ம-7)

## ஈடு செய்ய...

கப்பட்டது ஈடு செய்ய முடியாத இழப்பு என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண நூலகத்துக்கு கண்காணிப்பு விஜயம் செய்தபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், புதிய அரசாங்கத்தின் கீழ் யாழ்ப்பாண நூலகத்தை அபிவிருத்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

யாழ்ப்பாண நூலகத்தில் இருந்ததைப் போன்று வேறெங்கும் நூல்கள் இருக்கவில்லை எனவும் கடந்த காலத்தில் நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்டமையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் பிரதமர் குறிப்பிட்டார். (ம-7)

## செம்மணி...

செம்மணி மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான சாட்சிகளுக்கு மனித உரிமை ஆணைக்குழு பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும் என ஆணைக்குழுவின் ஆணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

செம்மணிப் புதைகுழிகளை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தனர்.

செம்மணிப் புதைகுழி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிட்டோம். அகழ்வுப் பணிகள் தொடர்பிலும் கேட்டறிந்தோம் என்றனர்.

அதன் போது ஊடகவியலாளர் ஒருவர் செம்மணிப் புதைகுழிகள் தொடர்பில் சாட்சியம் சொல்லத் தயார் என கிருஷாந்தி கொலை வழக்கில் குற்றவாளியாகச் சிறையில் இருக்கும் ராஜபக்ஷ என்பவர் கூறியுள்ளார். சிறையில் அவரது பாதுகாப்புத் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழு நடவடிக்கை எடுக்குமா? எனக் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவருக்குச் சிறையில் அச்சுறுத்தல் இருப்பதாக எமக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் நிச்சயமாக அவரது பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுப்போம் என்றனர்.

யாழ்ப்பாணத்தில் 96ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் மேற்கொண்ட விசாரணைகள் தொடர்பிலான அறிக்கையை வெளியீடு செய்வீர்களா? எனக் கேட்டபோது,

யாழ்ப்பாணத்தில் 1996 - 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு 2003ஆம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையை மனித உரிமை ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றனர். (ம-7,33,104)

## இலங்...

நேற்றும் குறித்தும் தடயவியல் நிபுணர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். (ம-7,33,104)

## நெடுந்...

டிக்கைகளில் ஈடுபட்டிருந்த 4 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் மீன்பிடித்த படகும் நான்கு இந்திய மீனவர்களும் காங்கேசன் துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் சட்ட நடவடிக்கைகளுக்காக அவர்கள் யாழ்ப்பாணம் மயிலிட்டி மீன்வள ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127


# துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்போபுரம் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய வயோதிபர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்போபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வாசனா
04.08.2025 வெற்றி வாரம் 0619
L 8 0 1 9 7 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 21,281,398.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2885
சீட்டிழுப்பு திகதி 2025.08.04 தினம் திங்கட்கிழமை
07 08 58 80 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,329,330.40
DLB

சனிதா
திகதி 04.08.2025 வெற்றி வாரம் 5046
01 14 72 79 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,842,298.00
DLB

ஜயோதா Jayoda
திகதி 2025.08.04 வெற்றி வாரம் 2149
21 49 57 64 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 30,828,970.00
DLB

ராசி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 4597
சீட்டிழுப்பு திகதி 04.08.2025 தினம் திங்கட்கிழமை
31 47 48 51 தனுசு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,421,540.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
R 13 05 29 32 43
2061
04.08.2025 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.586,035,867.80
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2711
சீட்டிழுப்பு திகதி : 2025.08.04
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,718,252.00
16 17 31 53 I
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதுமணத் தம்பதிகளுக்கு வீடு வழங்கும் திட்டம்

## அமைச்சர் வசந்த சமரசிங்க



(அநுராதபுரம்)

இலங்கையில் புதுமணத் தம்பதிகளுக்கு வீடு வழங்கும் திட்டம் அரசாங்கத்தால் செயற்படுத்தப்பட்டு வருவதாக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விழா ஒன்றில் பங்குபற்றி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

திருமணத்திற்கு பின்னர் தங்கள் சொந்த வீட்டில் வாழ விரும்பும் இளம் தலைமுறையினரின் கனவை இந்தத் திட்டம் நாட்டில் உள்ள வீட்டுவசதிப் பிரச்சினையைத் தீர்க்கும் நோக்கில் அடுத்த ஐந்து முதல் பத்து ஆண்டுகளுக்குள் இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன்,புதிய வீடுகளைக் கட்ட அரச ஊழியர்களுக்கு கடன் வழங்கும் திட்டமும் அரசாங்கத்திடம் இருப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ம-7)

# மாகாணங்களுக்கு அதிகாரங்கள் முழுமையாகப் பகிர வேண்டும்

## தயாசிறி ஜயசேகர எம்.பி

(கொழும்பு)

மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்வதாயின் முழுமையாக, முறையாக பகிர வேண்டும். அல்லது ஒன்றும் செய்யாமலிருக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் குருநாகல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுத் திங்கட்கிழமை (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது, மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கினால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சுயநிர்ணயம் தோற்றம் பெறும் என்று ஒரு தரப்பினர் தவறானதொரு நிலைப்பாட்டை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கு ஒருசில அரசியல் கட்சிகள் பொறுப்புக்கூற வேண்டும். மாகாண சபைத் தேர்தலை நடத்த எடுத்துள்ள நடவடிக்கைகளை அரசாங்கம் வெளிப்படையாக அறிவிக்க வேண்டும்.

மாகாண சபை முறைமை தொடர்பில் பாராளுமன்றத்தில் பல தனிநபர் பிரேரணைகளை முன்வைத்துள்ளேன். மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான அவசியம் அரசாங்கத்துக்கு காணப்படுகின்ற நிலையில் அரசாங்கம் பொறுப்பற்ற வகையில் செயற்படுவதை அவதானிக்க முடிகிறது.

மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் மீதான செல்வாக்கு குறைவடைந்துள்ளதால் மாகாண சபை முறைமையை இரத்துச்செய்யவோ அல்லது மாகாண சபைத் தேர்தலை தொடர்ந்து பிற்போடுவதற்கோ இடமளிக்க முடியாது என்றார்.

(ம-7)


வெளிநாட்டில் (canada) இல்வசிக்கும் மணமகள்களுக்கு மணமகன்கள் தேவை

1981(Divorce), 1990, 1990(Divorce), 1993, 1995(02), 1997, 1999, ஆண்டுகளில் பிறந்த மணமகள்களுக்கு உள்ளூர் மணமகன்கள் தேவை.

077 041 3462, 077 408 8241

(C-3574)


# செம்மணியில்...

செம்மணிப் பகுதியில் தற்போது அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் இரண்டு மனிதப் புதைகுழிகளுக்கு மேலதிகமாக அப்பகுதியில் வேறு மனித புதைகுழிகளும் காணப்படுகின்றனவா? என்பதனை கண்டறியும் நோக்குடன் ஸ்கான் நடவடிக்கைகள் நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

ஜி.பி.ஆர். ஸ்கானர் (தரையை ஊடுருவும் ராடர்) மூலம் பரந்துபட்ட ஸ்கான் நடவடிக்கைகளை முன்னெடுக்க பாதுகாப்பு அமைச்சின் அனுமதிகள் கிடைக்கப்பெறவில்லை

அந்நிலையில் ஸ்ரீ ஜெயவர்வத்தன புர பல்கலைக்கழகத்தில் உள்ள ஸ்கானர் கருவியை யாழ்.பல்கலைகழகம் ஊடாக பெற்று அதனைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி நேற்றுத் திங்கட்கிழமை குறித்த ஸ்கானரைப் பயன்படுத்தி ஆய்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் ஸ்கான் நடவடிக்கையின் போது செம்மணிப் புதைகுழி வளாகத்தில் பல இடங்களில் மனித எச்சங்கள் காணப்படுவதை ஸ்கான் இயந்திரம் அடையாளப்படுத்தியுள்ளது.

எதிர் வரும் காலங்களில் குறித்த பகுதி அகழ்வு நடவடிக்கைக்கு உட்படுத்தப்படும்.

பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக முன்னிலையாகும் சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் இதனைத் தெரிவித்தார்.

(ம-7,33,104)


வேலாயுதன் தேவசேனாதிபதி LLB, கொழும்பு
(அருள் கல்வி வட்டம்) G.C.E.(O/L) க.பொ.த (சா/த)
முற்றிலும் இலவசக் கருத்தரங்கு - 2025
(வட மாகாண ஆளுநரின் முழு அனுமதி ஆலோசனையுடன் நடைபெறவுள்ளது)

| திகதி | இடம் | நேரம் |
|---|---|---|
| 06.08.2025 புதன் | ஊர்காவற்துறை பிரதேச செயலகம் | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 07.08.2025 வியாழன் | வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரி | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 08.08.2025 வெள்ளி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (பெண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.00 – பி.ப 02.00 |
| 09.08.2025 சனி | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (ஆண்கள் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.00 – பி.ப 02.00 |
| 10.08.2025 ஞாயிறு | வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம் (கலவன் பாடசாலை மாணவர்கள் மட்டும்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 11.08.2025 திங்கள் | மன்னார் நகராட்சி சபை மண்டபம் (மன்னார் மற்றும் மடு மாணவர்கள்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 12.08.2025 செவ்வாய் | கிளிநொச்சி கூட்டுறவு சமுக மண்டபம் (கிளிநொச்சி தெற்கு மாணவர்கள்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 13.08.2025 புதன் | கிளிநொச்சி கூட்டுறவு சமுக மண்டபம் (கிளிநொச்சி வடக்கு மற்றும் துணுக்காய் மாணவர்கள்) | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 14.08.2025 வியாழன் | ஊற்றங்கரை பிள்ளையார் கோவில் மண்டபம் முல்லைத்தீவு | மு.ப 08.30 – பி.ப 02.00 |
| 15.08.2025 வெள்ளி | வவுனியா நகராட்சி சபை மண்டபம் | மு.ப 08.30 – பி.ப 02.00 |

- Tutes முற்றிலும் இலவசமாக வழங்கப்படும்.
- G.C.E.(O/L) கடந்தகால வினாவிடைத்தொகுப்பு புத்தகம் இலவசமாக வழங்கப்படும்.

குறிப்பு : மாணவர்கள் பாடசாலை சீருடையுடனும் பொறுப்பாசிரியர்களுடனும் வருகை தர வேண்டும்.

அனைவரும் கலந்துகொண்டு பயன்பெறவும்.

செயலமர்வின் அமைப்பாளர்கள்

1. திரு.வேலாயுதன் தேவசேனாதிபதி L.L.B(சிரேஷ்ட சட்டத்தரணி), தலைவர் - EDCC (தொ.பே : 0771133400)
2. திரு.வே.சுந்தரேஸ்வரன் (இளைப்பாறிய பிரதி முகாமையாளர்) தேசிய லொத்தர் சபை தொ.பே: 0773850841
3. திரு.கந்தசாமி சக்திதரன், பொது செயலாளர் EDCC, இலங்கை, தொ.பே 0770703360
4. திரு.ப.சுதர்சன் (பிரதிக்கல்விப் பணிப்பாளர் வலயக்கல்வி அலுவலகம்) தொ.பே: 0773144527
5. Mr.Vijasundaram Ramnath, Coordinating Secretary of Hon.,MP.M.Jegatheeswaran
6. கிருஷ்ணபிள்ளை சிவானந்தன் B.A, செயலாளர், இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் தென்மராட்சி.
7. திரு.சூசை. ஜெபநேசன் தென்மராட்சி இணைப்பாளர். தொ.பே: 0771678150
8. P.கமலதாசன் (அதிபர் – யாழ்.ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்) – தேசிய ரீதியான வளவாளர், தரப்படுத்தப்பட்ட அதிபர் சங்கம் இணைப்பாளர் யாழ்ப்பாணம். தொ.பே: 0771116739
9. திரு.S.மணிமாறன் (ஆசிரியர் – யா/யாழ்.மத்திய கல்லூரி)

இணை அனுசரணை கல்விக் காருணியன் E.S.P. நாகரட்ணம் ஐயா
(கஜமுகன் ஹாட்வெயர்) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே :021 222 2833

(C-3567)



உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3571)



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3573)

076 825 7716 (ஆகாஸ்)



வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

தொடர்புகளுக்கு :
075 498 5400, 077 937 0000
021 221 7600

(4972)



உடனடி வேலைவாய்ப்பு

யாழ் நகரில் அமைந்துள்ள பெண்கள் மட்டும் பணிபுரியும் நகை அடகு பிடிக்கும் கடைக்கு வேலையாட்கள் தேவை

தொடர்புகளுக்கு
077 784 0379

(4973)



கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2660/-
21-27 Kg 2480/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-3571)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.